Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 9 (22.4.94) வெள்ளிக்கிழமை ஓசை 63

## பயிலுநர் ஆசிரியர்களின் சேமிப்புநிலுவை அறிவிப்பு

மத்திய கல்வி அமைச்சினால் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுக் கடமையாற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு மாதாமாதம் அவர்களுடைய பாடசாலை சேமிப்புக்கணக்கில் வைப்பிலிடப்படும் சேமிப்புக் கணக்கு நிலுவைகள் பற்றிய விபரங்கள் கொழும்பு தேசிய சேமிப்பு வங்கியினால் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக இவர்கள் கடமையுரியும் கல்விக் (11ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐ. தே. கவிற்குள் முரண்பாடு!

## தேர்தலுக்கு முன் சுமுகத்தீர்வு காண கட்சி உறுப்பினர் பலர் வற்புறுத்து

[ கொழும்பு ]

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணப்படவேண்டும் என ஒரு தரப்பினர் விரும்புகின்றபோதும் இப் பிரச்சினைக்கு சுமுகமான அரசியற் தீர்வொன்று காணப்படவேண்டும் எனவும், அதன் பின்னரே ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் நடத்த அரசாங்கம் முனையவேண்டும் எனவும் ஐ. தே. க எம். பிக்கள் பலர் மேலிடத்தை வற்புறுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது

இது குறித்து தலைப்புச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள கொழும்புப் பத்திரிகை ஒன்று இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றைக் கண்டபின்னரே அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டுமென்று ஐ தே.க. எம்பிக்கள் பலரும் அரசாங்க மேலிடத்தை சமீப சில வாரங்களாக வலியுறுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கின்றது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; அரசாங்கத்தில் உள்ள தமிழ் முஸ்லிம் எம் பிக்கள் மட்டுமல்ல பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பலரும் இக் கோரிக்கையை விடுத்து வருகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பனவற்றில் ஈட்டிய வெற்றியை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் தேர்தல்களிலும் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்படவேண்டும்.

தமிழ் முஸ்லிம் என்று பிரித்து வடக்கு - கிழக்கு பிரச் (11ஆம் பக்கம் பார்க்க)

## உடன் நாடு திரும்ப கூரேக்கு மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளர் சிறிசேன கூரேயை உடன் நாடு திரும்புமாறு சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் முத்திரையிடப்பட்ட அவசர அழைப்பொன்று அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாடொன்றில் தங்கியிருக்கும் இவருக்கு முன்னரும் இதுபோன்றதொரு அழைப்பு (11ஆம் பக்கம் பார்க்க)

## தம்பலகாமம் அகதிமுகாமை மூடிவிட அரசு முயற்சி

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் கோயில் குடியிருப்புப் பகுதியிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாமை மூடுவதில் சிறிலங்கா அரசு துரிதமாகச் செயற்படுகிறது.

இந்த முகாமில் அயலிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த இடம் பெயர்ந்த தமிழர் வசிக்கிறார்கள். இவர்கள் இரண்டாவது ஈழப் போரின் பின்னர் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கையி (11ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் வென்றால் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைப்போம்

### வடக்கு கிழக்கிலுள்ளது இனப்பிரச்சினையே என்கிறார் சிறிமா

(கொழும்பு)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்குமானால் வடக்கு கிழக்குப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடும் என எதிர்க்கட்சி தலைவியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் தன்னைச் சந்தித்த உலகவங்கி தென்னாசிய பிராந்திய வேலைத்திட்டப் பிரிவின் நிர்வாக இயக்குநர் போல் ஐசனுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினை ஒரு தேசிய இனப்பிரச்சினை என்பதை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

சுமார் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் நடைபெற்ற இச் சந்திப்பின் போது எதிர்வரும் தேர்தல்கள் மூலம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆட்சியமைக்கும் வாய்ப்புக் கிடைத்தால் பொருளாதார (12ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி சிறுவன் பொலிசாரால் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதினான்கு வயது சிறுவன் ஒருவர் மட்டக்குளி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

நீர்வேலியைச் சேர்ந்த காந்தன் என்ற சிறுவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவரின் ஒரு கையில் "கே" என்ற எழுத்து எழுதப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது

இவருக்கு தங்குவதற்கு இடம் கொடுத்த தமிழ்க் குடும்பமும் தற்போது பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## விசேட படகுச்சேவை

இன்று கிளாலி - பூநகரி படகுச் சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## உல்லாசப் பயணிகளின் பாதுகாப்புக்கு உறுதி

### அமைச்சர் ஹமீத் வழங்கினார்

சிறிலங்காவிற்கு வரும் சகல உல்லாசப் பயணிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. சகல உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களிலும் தற்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது பற்றிய தகவல்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் தனது அலுவலகத்தில் வெளிநாட்டு அலுவலக அதிகாரிகளை நேற்று சந்தித்த போது கூறினார்.

சிறிலங்கா வரும் உல்லாசப் பயணிகள் குறித்து எவ்வித அச்சமும் தேவையில்லை என அவர் கூறினார்.

## சுழிபுரம் நோக்கி ஷெல் வீச்சு பெண் பலி; சிறுமி காயம்

(தெல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து சுழிபுரம், மூளாய் பகுதியின் மக்கள் குடியிருப்புகள் மீது அகோர எறிகணை வீச்சினை மேற்கொண்டதில் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். சிறுமி ஒருவர் சிறு காயத்துக்குள்ளானார். இவர்களது வீடும் பலத்த சேதத்திற்குள்ளானது: நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சுழிபுரம் கல்விளானைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தாயான மாணிக்கம் சரசு (வயது 40) என்ற பெண் வீட்டில் இருந்தபோது எறிகணை வீச்சினால் தாக்குண்டு தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் ஸ்தலத்திலேயே பலியானார்.

இறந்தவரது மகளான மாணிக்கம் ஜெயமலர (வயது 8) என்ற சிறுமிக்கு கைவிரலில் காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். மேலும் அன்றைய தினம் நள்ளிரவு 12.45 மணியளவிலும் பொன்னாலை உட்பட மேற்படி பகுதிகளெங்கும் பரவலாக சுமார் அரைமணி நேரம் பலத்த எறிகணை வீச்சினை அதேகாவல் நிலைகளிலிருந்து மேற் (11ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸை சோதனையிட்ட பொலிசார் கொலை

### ஆயுதமும் பறிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பஸ் வண்டி யொன்றை பரிசோதனை செய்து கொண்டிருந்த சிறிலங்கா பொலிஸ் ஒருவர் இனம் தெரியாத ஒருவரால் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்த ஆயுதமும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பிலிருந்து ஏறா (11 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**ஆங்கில மருத்துவம்**
சகல விதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை, மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது. பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-9016)

**ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்**
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் மாதாந்த அருள்மலர் அண்மைக்கால பிரதிகள் ஒரு சில விற்பனைக்குண்டு. மில்க்வைற் 525/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்- (சி-9210)

**ராகு, கேது மாற்றமும் பலவருஷ பலன்களும்**
ரூ. 10/- எங்கும் விற்பனையாகின்றது. கைரேகை சாஸ்திரம், எண் ஜோதிடம், விவாகப் பொருத்தம், உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகங்களின் விஞ்ஞான ரீதியான கணிப்புகளுக்கும் நேரிலே சந்திக்கலாம். ''சத்யா'', இடிகுண்டடுகாமை, கட்டுடை. (8107)

**பேட்டுக்குஞ்சு விற்பனை**
கைலைன் பிறவுண் 1 1/2 மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (8105)

**கோல்டன் கொமட் விற்பனை**
கோல்டன்கொமட் 10 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள், சேவல்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ''மல்லிகாபதி'' சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (8106)

**தவறிவிட்டது**
குமாரவேலு - சுந்தரலிங்கம் ஆகிய எனது கைச்சங்கிலி ஒன்று 21. 4. 94 அன்று திருநெல்வேலி சிவன்கோவிலுக்கும் பழைய பூங்கா வீதிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர் கு. சுந்தரலிங்கம் 7, புது வீதி, கொய்யாத்தோட்டம் என்ற விலாசத்தில் சேர்ப்பிக்கவும் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். (8117)

**பழங்கள் தேவை**
உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கிறோம்.
TASTELINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, JAFFNA. (சி-9053)

## உதைபந்தாட்டம்
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டு கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது இன்றைய போட்டியில் பங்றோயல் வி. கழகத்தை எதிர்த்து ஸ்ரார் ஐக்கிய வி. கழகமும், றோயல் வி. கழகத்தை எதிர்த்து ஜங்கெல்றீஸ் கழகமும் மோதவுள்ளன. போட்டி மாலை 3மணிக்கு ஆரம்பமாகும்.

---

# சமையலாளர் தேவை

சமையல் வேலையில் அனுபவம் மிக்கவர்கள் தேவை.

விண்ணப்ப முடிவுத் திகதி: 27.04.94

அனுப்பவேண்டிய முகவரி;

விளம்பர இல. 325
ஈழநாதம்,
இல. 31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (சி-9227)

---

**மதுரா ஆதரவாளர்களின்**

## பரிசுத்திட்டசிட்டையின் அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு:- 2889
2ஆம் பரிசு:- 3873
3ஆம் பரிசு:- 105

ஆறுதல் பரிசுகள் - 10

| | | | |
|---|---|---|---|
| 1) 11674 | 2) 1883 | 3) 8131 | 4) 2356 |
| 5) 667 | 6) 11912 | 7) 5480 | 8) 7673 |
| 9) 5664 | 10) 6575 | | |

குறிப்பு:- பரிசுத்திட்டகுலுக்கலில் தெரிவான அதிர்ஷ்டசாலிகள் மதுரா பட்டு மாளிகையில் சிட்டைகளைக் காட்டி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

75, பெரியகடை, யாழ்ப்பாணம்.

மதுரா பட்டு மகால் ஸ்தாபனத்தார்

(சி-9226)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

உயிரியல் தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்காக பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994 மே 20-ம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**சம்பள அளவுத் திட்டம்:**

தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் 5,270/- ரூபா (நிலையான) மாதமொன்றுக்கு

**தகைமைகள்:**

1) தொடர்புடைய பாடத்தில் சிறப்புப்பட்டமொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு)

அல்லது

2) தொடர்புடைய பாடத்தில் சிறப்புப்பட்டமொன்றில் இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு)

அல்லது

3) தொடர்புடைய பாடத்தில் பீ.ஏ பி எஸ்.சி. சிறப்புப்பட்டமொன்றில் சாதாரண சித்தி.

**குறிப்பு**

அ) மேலே 1) அல்லது
2) இன் கீழ் விண்ணப்பதாரி எவரும் தகைமைபெறா விட்டால் மட்டுமே 3) இன் கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரி கவனிக்கப்படுவார்.

ஆ) மேலே 1) இன் கீழ் விண்ணப்பதாரி எவரும் தகைமை பெறாவிட்டால் மட்டுமே 2) இன் கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரி கவனிக்கப்படுவார்.

சம்பளத்துடன் 1994 திசெம்பர் 31ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்தொகை நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றப்படியாக செலுத்தப்படும். 1993 மே 12ஆம் திகதிய 9/93ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்று நிருபத்திற்கு ஏற்ப 600/= மாதாந்தப்படி செலுத் தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் மக்கள் வங்கி, நவீன சந்தைக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அல்லது சிறாப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணபித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில்பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் 23 x 10 ச மீ. அளவுடைய 1/-ரூபா முத்திரையொட்டி சுயமுகவரியிட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் அரசாங்கத் திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் உரியநிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும்

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-04-19

(சி-9220)

---

அரியாலை

## புனித யூதா ஆலயத் திருவிழா - 1994

23-04-94 மாலை 5-00 மணி: நற்கருணை வழிபாடு 24-04-94 காலை 7-00 மணி; திருநாள் திருப்பலி நடைபெறும். மாலை 7-00 மணிக்கு தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து அரியாலைப் பங்கில் வசிக்கும் கலைஞர்கள் வழங்கும்,

**''யூதாததேயு'' - நாட்டுக்கூத்து**

கோயில் அரங்கில் நடைபெறும்

-அரியாலை பங்குத் தந்தை

(8115)

---

## விலங்கியல்

திரு, R. ஈஸ்வரதாசன்
B,Sc (Cey) Dip. In Ed

புதிய பிரிவு - 2

**ஆரம்பம்: 23. 04. 94 சனி**

(பிரிவு 1க்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது பிரிவு 2க்கான அனுமதி வெள்ளிவரை வழங்கப்படும் நேர அட்டவணை நிறுவனத்தில்)

## SCIENCE COLLEGE

விஞ்ஞானக் கல்லூரி
பெருமாள் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9225)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1994-04-22

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அனலை தீவைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்-

1987ஆம் ஆண்டு யாழ் - காங்கேசன்துறை 'காபர் வியூ' உல்லாசவிடுதி சிறிலங்கா இராணுவ மினிமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**தாஸ்** (கஸ்பார் சூசைதாசன் உயிலங்குளம்-மன்னார்)

**கப்டன் பவான்/ஐயா** (பொன்னம்பலம் யோககுமார் - சுதுமலை, மானிப்பாய் - யாழ்)

**லெப். இர்மானி** (சிலுவைராசா ஜோண்சன் பேட்டன் - குருநகர் - யாழ்)

**சுவர்ணன்** (பொன்னையா சிறிபோஸ்- சிறுவிளான் - யாழ்)

1989ஆம் ஆண்டு திருமலை - கப்பல்துறைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். கிருஷ்ணன்** (ஆனந்தராசா கிருஷ்ணராசா - கும்புறுப்பிட்டி - திருமலை)

1991ஆம் ஆண்டு மாசி மாதம் 10ஆம் திகதி யாழ் - வல்வெட்டித்துறையில் சிறிலங்காப்படையினரின் விமானக்குண்டு வீச்சில் விழுப்புண்ணடைந்து சிகிச்சையின் போது யாழ் - மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

**மதி** (தர்மராசா தயாபரன் - மாமுனை வடக்கு, செம்பியன்பற்று - யாழ்)

1992ஆம் ஆண்டு யாழ் - தீவகப் பகுதியில் வேவு பார்க்கச் சென்ற வேளை சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில வீரச்சாவெய்திய,

**புனிதன்** (நமசிவாயம் சிறிதரன் - ஹட்சன் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**எல்லாளன்/நிசாந்தன்** (பொன்னுத்துரை தங்கத்துரை - 5-ம் வட்டாரம், வேலணை மேற்கு-யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9224)

# மனிதனும் வரலாறும்

## 1

சமூக வரலாறு என்றால் என்ன? அதன் இயங்கு விதிகள் யாவை? மனித சமூக வடிவங்களை உயர்ந்த படிநிலைக்கு உந்தித்தள்ளும் இலக்கில் வரலாறு அசைந்து செல்கிறதா? அதன் அசைவியக்கத்தை அடையாளம் கண்டு, அதன் போக்கை, அது செல்லும் பாதையை தீர்க்கதரிசனம் கூறுவது சாத்தியமா? மார்க்சிய வரலாற்றியலை ஒரு சமூக விஞ்ஞானக் கோட்பாடாக கொள்ள முடியுமா?

இன்றைய சமூக சிந்தனை உலகில் இப்படியான கேள்விகள் எழுப்பப்படுகின்றன. சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் சோசலிச கட்டமைப்பு சிதைவுற்றதன் விளைவாக மார்க்சியத்தின் அடிப்படையான சமூக வரலாற்றுக் கோட்பாடுகள் குறித்து மீள் விசாரணைகள் எழுந்துள்ளன.

கார்ல் மாக்சின் வரலாற்றுக் கோட்பாடு இயங்கியல் தத்துவத்தை மூலமாகக் கொண்டது. இந்த இயங்கியல் தத்துவத்தின் பிதாமகராக கருதப்படுபவர் ஹேகல் எனப்படும் ஜேர்மானிய தத்துவாசிரியர். 1770லிருந்து 1831 வரை வாழ்ந்த ஹேகலின் தத்துவார்த்த எழுத்துக்கள் மார்க்சிய சிந்தனைப் பாரம்பரியத்தில் பெரும் தாக்கத்தை விளைவித்தது.

மார்க்சின் வரலாற்றுப் பொருளியம் **(HISTORICAL MATERIALISM)** பற்றி விசாரணையைத் தொடங்குவதற்கு முன்னர் ஹேகலின் தத்துவம் என்ன சொல்கிறது என்பதை இக் கட்டுரையில் பார்ப்போம்

கார்ல் மாக்சின் வரலாற்றுக் கோட்பாட்டை ஆழமாகப் புரிந்து கொள்வதாக இருந்தால் ஜேர்மானிய சிந்தனையாளர் ஹேகலின் (HEGEL) தத்துவ தரிசனத்தை படித்தறிவது அவசியம் என்று லெனின் அடிக்கடி வலியுறுத்துவார். இந்தக் கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

அன்றைய ஜேர்மானிய கருத்துலகின் திருமூலராக ஹேகல் விளங்கினார். அவர் படைத்த எண்ண உலகம் மாக்ஸ் போன்ற அன்றைய இளம் சிந்தனையாளர்கள் மீது ஆழமான தாக்கத்தைப் பதித்தது. ஹேகலின் தத்துவத்தை மாக்ஸ் கடுமையாக விமர்சித்தார். அகவயமான ஆன்மீகவாதம் எனச் சாடினார். எனினும் ஹேகலின் கருத்துலக ஆதிக்கத்திலிருந்து அவர் முற்று முழுமையாக விடுபட்டதாக இல்லை. ஹேகலின் இயங்கியலும் வரலாற்றுத் தத்துவமும் கார்ல் மாக்சை வெகுவாக ஆகர்ஷித்துக் கொண்டன. ஆன்மீக உலகத்தில் புதைந்து போயிருந்த ஹேகலின் இந்தச் சிந்தனைக் கருவூலங்களை பொருளிய உலகத்தை விளக்கும் அறிவியற் கோட்பாடுகளாக மாக்ஸ் மாற்றியமைத்தார் எனக் கூறுவது பொருத்தமாகும். இதனால்தான் மார்க்சியத்தை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு ஹேகலின் தத்துவத்தைப் படிக்க வேண்டும் என லெனின் கூறினார்.

ஹேகலின் தத்துவத்தைப் புரிந்து கொள்வதுஎன்பதும்இலகுவான விடயமல்ல. மிகவும்கனமன, ஆழமான கருத்துக்களை, மிகவும் தெளிவற்ற பூடகமான வார்த்தைகளில், மிகவும் சிக்கலான முறையில் விபரிப்பதில் அவர் வித்தகர், வரலாறு பற்றி அவர் விளக்கும் Phenomenology of the mind, Philosophy of History, என்ற நூல்கள் இத்தகைய சொற் புதிர்கள் நிறைந்தவை. உதாரணமாக, மனம் என்று அவர் பிரயோகிக்கும் சொல் பல்வேறு அர்த்த பரிமாணங்களைக் கொண்டது. அவரது மொழியில் மனம் என்பது சாதாரண மனித மனதை மட்டும் குறிப்பிடுவதல்ல. அது மனித ஆன்மாவைக் குறிப்பிடும். மானிடத்தின் கூட்டு மனதையும் அது குறிப்பிடும். அதே வேளை, அண்டமெங்கும் வியாபித்து நிற்பதாக அவர் கருதும் பிரபஞ்ச மனதையும் அது பொருள்படுத்தும். அதேசமயம், அது மெய்ப்பொருளையும் குறிக்கும். மெய்யுண்மையாக அவர் கருதும் பரிபூரணத்துவத்தையும் குறியீடு செய்யும். தனிமனித மனம், மானிட மனமாக, பிரபஞ்சமனமாக, ஆத்மாவாக, பரமாத்மாவாக மெய்யுண்மையாக, சகலதையும் உள்ளடக்கிய முழுமையாக, பரிபூரணத்துவமாக, எல்லாம்வல்ல கடவுளாக அர்த்த பரிமாணம் கொள்ளும்.

இந்தப் பிரபஞ்ச மனதின் அசைவியக்கத்தையே வரலாறு என்கிறார் ஹேகல். இந்த அசைவியக்கமானது பிரபஞ்சத்திலிருந்து மனித வாழ்க்கைவரை வியாபித்து நிற்கிறது. அது எல்லாவற்றையும் நகர்த்திச் செலலும் மாபெரும் இயங்கு சக்தியாக அசைகிறது. இந்தப் பேரசைவு ஒரு முரணிய இயக்கமாக சகலதையும் படைத்து, சகலதையும் அசைத்து, சகலதையும் அழித்து, ஒவ்வொரு படிநிலையாக, முழுமையை நோக்கி முன்னேறிச் செல்கிறது. இன்னொரு அர்த்தத்தில் வரலாறு என்பது இறைவனின் பிரபஞ்ச நடனம்.

பூமியிலும் இந்த நடனம் அரங்கேறுகிறது.

மனித நாகரீகங்கள் தோன்றுகின்றன. சாம்ராஜ்யங்கள் எழுகின்றன. மனித பண்பாட்டு மறுமலர்ச்சி யுகங்கள் பிறக்கின்றன. இவை தோன்றி, வளர்ந்து, மடிந்துபோக புதிய நாகரீகங்கள், புதிய சாம்ராஜ்யங்கள், புதிய பண்பாட்டு யுகங்கள் தோன்றுகின்றன. இந்தப் பிறப்பு, இருப்பு, அழிப்பு என்ற அசைவியக்கத்தின் ஊடாக மானிட மனமானது முரண்பாடுகள் களையப்பெற்ற முழுநிறைவை நோக்கி நகர்கிறது. சட உலகின் சாரமாக ஈர்ப்பு சக்தி இருப்பது போல, ஆன்ம உலகின் சாராம்ச சக்தியாக விடுதலையுணர்வு இயங்குகிறது. எனவே வரலாறு என்பது ஆன்மத்தின் விடுதலை நோக்கிய நகர்வு (History is the Movement of the Spirit towards Freedom என்கிறார் ஹேகல்.

மெல்ல, மெல்ல, மானிடப் பிரக்ஞை விழிப்பு நிலை பெறுகிறது. விடுதலை பற்றி சுயவுணர்வு கொள்கிறது. தளைகளை நீக்கி விடுதலையைப் பெற முனைகிறது. ஆதி நாகரீகங்களில் அனைத்து அதிகாரமும் கொண்ட அரசனே சுதந்திர புருஷனாக விளங்கினான். மற்றெல்லோரும் அவனுக்குக் கீழ் அடிமைகளாக உழன்றனர். காலப் போக்கில புதிய நாகரீகங்கள், புதிய பண்பாட்டு உலகங்கள் தோன்றி, விடுதலையின் விழிப்புணர்வை மனிதரிடையே வளர்த்தது. வேதங்களாக, தத்துவங்களாக, கலை, இலக்கிய வடிவங்களாக, சமூக சிந்தனைகளாக, அரசியற் கோட்பாடுகளாக, காலத்திற்குக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டுக் கோலங்கள் விடுதலையின் விழிப்புணர்வை விரிவுபடுத்தியது. போர், புரட்சி, கிளர்ச்சி என்று மனிதர்கள் விடுதலை வேண்டி எழுச்சி கொண்டனர். இவ்விதம் விடுதலையின் தேடுதலாக மனித வரலாறு நகர்கிறது. இந்த வரலாற்று நகர்வு, யுகங்களை விழுங்கிய நீண்ட பயணமாகத் தொடர்கிறது. இந்தப் பெரும் பயணத்தில், முடிவில்லாது தொடரும் இந்த ஆன்மீக யாத்திரையில், கோடானு கோடி மனிதர்களின், கோடானு கோடி சுயசரிதச் சுவடுகளை உள்வாங்கி வரலாற்று இயக்கம் அசைந்து செல்கிறது.

பிரபஞ்ச பேரான்மாவாகவும், பூவுலக ஜீவான்மாவாகவும், கடவுளாகவும், மனிதனாகவும், ஒன்றோடு ஒன்று சங்கமிக்கும் முழுமையாகவும், சகலதாகவும், சர்வவியாபகம் கொண்டு பிரம்மன் நடத்தும் திருக்கூத்து பற்றி உபநிடதம் படித்தவர்களுக்கு ஹேகலின் வரலாற்றுக் கடவுளைப் புரிந்து கொள்வது சிரமமாக இருக்காது. இந்தப் பிரபஞ்ச பேரான்மாவின் சுயசரிதமாகவே மனித வரலாற்றை எழுதுகிறார் ஹேகல்.

எங்கோ, மனித புலன்களுக்குப் புலப்படாத மறு உலகிலிருந்து மனித வாழ்க்கை நிச்சயமாகிறது. அண்டம் அளாவிய ஒரு பெரும் தெய்வீகத் திட்டத்தை நிறைவு செய்ய நாம் எல்லோரும் இந்தப் பூவுலக யாத்திரையில் வந்து செல்கிறோம். எமது தனிப்பட்ட வாழ்வும், வரலாறும் ஏதோ ஒரு அர்த்தத்தில், ஏதோ ஒரு நோக்கில், ஏதோ ஒரு காரணத்தில் நெறிக்கப்படுகிறது. அது எமக்குப் புலப்படுவதில்லை. நாம் எமது வாழ்க்கைக்குக் கொடுக்கும் அர்த்தங்கள் எல்லாம் அர்த்தமற்றவை. எமது வாழ்க்கையின் அர்த்தத்தை நாம் கண்டுகொள்ள முடியாது. அது பிரபஞ்ச முழுமையில் ஒளிந்து கிடக்கிறது. அந்தப் பிரபஞ்ச முழுமையின் தரிசனத்தில் மட்டுமே அதன் உண்மை புலனாகும். முழுமை பெறாத நிலையில், பூரணமற்ற தன்மையில், இருப்பின் இரகசியத்தை நாம் புரிந்து கொள்ள முடியாது. எமக்குப் பின்னாலிருந்து ஏதோ அசைக்க நாம் அசைபடுகிறோம். மனிதப் பொம்மைகளாக, நாம் பொம்மலாட்டம் ஆடுகிறோம். சிந்தித்து செயல்படுவதாக நாம் எண்ணிக் கொள்வது எல்லாம் அபத்தமானது. வரலாற்றின் அரூப கரங்களால் நகர்த்தப்படும் பகடைக் காய்கள் நாம்.

அமைதியும் ஆனந்தமும், ஒழுங்கும் ஒத்திசைவும் நிறைந்த பொற்காலங்களை வரலாறு படைப்பதில்லை. அது உலக வரலாற்று ஏட்டின் வெற்றுப் பக்கங்களாகவே இருக்கும் என்கிறார் ஹேகல். முரண்பாடும் மோதலும், சாவும் அழிவும் நிறைந்த துன்பியல் நாடகமாக வரலாறு இந்தப் பூமியில் அரங்கேறுகிறது. மானிடம் இரத்தம் சிந்தியபடி சிலுவையைச் சுமந்து செல்கிறது. பூரணத்துவம் நோக்கிய பாதையில் மனிதன் இரத்த ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டும். மனித வாழ்வை, வரலாறு அப்படி விதித்திருக்கிறது. ஒரு சிலர், வரலாற்றினால் அபூர்வமாக தேர்ந்தெடுக்கப்படும் சிலர், வரலாற்று நாயகர்களாகப் பிறப்பெடுக்கின்றனர். அந்த உலக வரலாற்று நாயகர்கள் (World Historical Beings) வரலாறு விதித்த பணிக்காக அவதாரம் எடுக்கிறார்கள். அவர்கள் மூலம், வரலாறானது தனது நோக்குகளை தந்திரமாக, நுட்பமாக சாதித்து விடுகிறது. மகா அலெக்சாந்தர் தொடக்கம் நெப்போலியன் வரை, யுகம், யுகமாக, வரலாற்று மனிதர்கள் தோன்றி, வரலாற்றை நகர்த்திச் செல்ல, வரலாறு விதி செய்திருக்கிறது என்கிறார் ஹேகல்.

ஹேகல் சித்தரிக்கும் வரலாறு, ஆன்ம உலகிலிருந்து, இறுதியில், அரசியல் உலகத்தில் பிரவேசிக்கிறது. நிறைவையும், விடுதலையையும் நோக்கிய வரலாற்றின் முனைப்பில் மனிதன் நாகரீகங்களைக் கட்டி எழுப்புகிறான். அந்த நாகரீகங்களின் அதியுன்னத வளர்ச்சியாக நவீன அரசு (ஹேகல் காலத்து ஜேர்மானிய அரசு) வடிவம் எடுக்கிறது. தார்மீக அறத்தின் முழுமையாக (Ethical Totality) ஒரு தெய்வீக கருத்தின்திருவடிவமாக (Embodiment of a Divine Idea ) அறிவியத்தின் பொருள் வடிவமாக [Objectification of Reason] அரசு உருவாக்கம் பெறுகிறது என்கிறார் ஹேகல்.

அரசு என்பது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்த ஒரு முழுமை. தனிமனித மனமும் சமூக மனமும் சங்கமமாகும் ஒன்றியம். அரசு என்ற இந்த உன்னதமான முழுமையிலேயே தனிமனிதன் தனது உரிமையையும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள முடியும். தனிமனிதன் சுயநல அபிலாசைகளைத் துறந்து, பொதுநல நோக்கிற்காக அரசின் கட்டமைப்பிற்கு கட்டுபபட வேண்டும். அரச சட்டங்களுக்கு அடிபணிய வேண்டும். அரசு என்பது ஒரு தேசத்தின் ஆன்மா. அந்தத் தேசிய ஆன்மாவில், அந்த முழுமையான உண்மையில், தனிமனிதம் நிறைவு காண முடியும், என்கிறார் ஹேகல்.

ஹேகலின் வரலாற்றுக் கடவுள் இறுதியில் அரசு என்ற அவதாரம் எடுக்கிறது. அகிலம் எங்கும் வியாபித்து நிற்கும் பிரபஞ்சப் பேரான்மா தேசிய ஆன்மாவாக உருமாற்றம் பெறுகிறது. பேருலகத்தின் முழுமை ஜேர்மானிய தேசத்தின் எல்லைக்குள் முடக்கப்படுகிறது. முரணிய இயக்கத்தில் அசைந்து செல்லும் பிரபஞ்ச மனம் முரண்கள் நீங்கிய சமூக மனமாக உருவாக்கம் பெறுகிறது. விடுதலை நோக்கிய, வரலாற்றின் முடிவில்லா முனைப்பு அரச அதிகாரத்திற்குள் தஞ்சம் புகுந்து கொள்கிறது.

ஹேகலின் வரலாற்றுத் தத்துவத்தில் ஏன் இந்த முரண்பாடு எழுந்தது? அரச நிறுவனத்திற்கு ஏன் அவர் முக்கியத்துவம் கொடுத்தார்? முதுமைக்கால எழுத்துக்களில் அரசின் உன்னதம் பற்றி அவர் போதித்தது ஏன்? அவரது உலக வரலாற்றுத் தத்துவம் ஜேர்மானியப் பேரினவாதத்திற்குள்புதைக்கப்பட்டதன் காரணம் என்ன?

## ▪ பிரம்மஞானி ▪

பிரஞ்சுப்புரட்சியால் பரவிய சுதந்திரத்தீஜேர்மானியஆளும் வர்க்கத்திற்கு சவாலாகஎழுந்தது. அவ்வேளை ஹேகலின் தத்துவம் அன்றைய சர்வாதிகார அரசை நியாயப்படுத்த முனைந்தது, என அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது அரசும் சமூகமும் முரண்பட்டு நின்ற பொழுது, தனிமனித சுதந்திரத்தை அரசு நசுக்கிய பொழுது, அவர் அரசுக்கு சார்பாக எழுதினார். தனிமனித ஆன்மாக்களை தேசிய ஆன்மா விழுங்கிக்கொள்வது தான் முழுமை என அவர் எழுதியது புரட்சியாளர்களைச் சீற்றம் கொள்ளச் செய்தது.

தனது தத்துவ தரிசனத்தின் ஆழத்தையும் வீச்சையும சாதாரணமானவர்களால் புரிந்து கொள்ள முடியாதென தனது எதிராளிகளைச் சாடினார் ஹேகல். எனினும் அன்றைய ஜேர்மானிய சர்வாதிகார அரசு அவரைப் 'புரிந்து கொண்டு' அவரது தத்துவச் சிந்தனையை அரச சித்தாந்தமாக அங்கீகரித்து, அவருக்குப் புகழஞ்சலி செலுத்தியது.

ஹேகலின் மறைவிற்குப் பின்னர், அவரது தத்தவக் கோட்டையைத் தகர்த்தெறிய முனைந்த சிந்தனையாளர்களில் கார்ல் மாக்ஸ் முதன்மையானவர். இந்தச் சிந்தனைத் தகர்ப்பில், மாக்ஸ், எந்தக் கருத்துக்களைத் தூக்கி எறிந்தார், எந்தக் கருத்துக்களை உள்வாங்கி புனரமைப்புச் செய்தார் என்பதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

(தொடரும்)

(நன்றி: வெளிச்சம்)

# சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

உள்ளூராட்சி நிர்வாகத்தைச் சுவீகரித்துக் கொண்ட அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் லாபத்திற்காக உள்ளூராட்சிச் சபைகளைச் சமார்த்தியமாகப் பயன்படுத்திக்கொண்டன, அரசியல் என்ற எல்லையைக் கடந்து விரிவான சமுதாயப் பிரச்சினையில் அக்கறை காட்டவில்லை, இதனால் அடிப்படையில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் புறக்கணிக்கப்பட்டன என்பதைக் கடந்தகால வரலாறு காட்டுகிறது,

**- மதன் -**

மருத்துவத் துறையில் சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளின் பணி இப்போது பலராலும் உணரப்படுகிறது. இந்த நிலையில் வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்திய சேவை எல்லா மக்களுக்கும் கிடைப்பதில்லை என்ற ஆதங்கமும் உள்ளது. சித்த ஆயுர்வேத மருத்துவ முறைகளின் தனிப்பண்பு இன்றைய வாழ்வில் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது, அதுமட்டுமல்ல; சில ரோகங்களுக்கு ஆயுர்வேத சிகிச்சை முறைகள் இன்றியமையாதவை என்று மேற்கத்திய மருத்துவர்களே அழுத்தமாகக் கருத்து வெளிப்படுத்தியுள்ளனர். அதேவேளை ஆங்கில மருந்து விநியோகத்தை அரசு கட்டுப்படுத்தியிருக்கும் சூழலில் வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளின் தேவை மேலும் அதிகரித்துள்ளது.

வாத ரோகம், சருமவியாதி, பாண்டு, காமாளை, பீனிசம் மற்றும் குழந்தைகள் நோய்களுக்கு நிவாரணம் காண மக்கள் உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளை நாடுகின்றனர். சமீபகாலத்தில், பன்முகப் பாதிப்புகளால் காய்ச்சல், வயிற்றோட்டம், சளி, இருமல் மற்றும் கெற்ப நோய்களுக்கும் மக்கள் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளை நாடும் நிலை நீடிக்கிறது. இதனை உள்ளூராட்சி ஆணையாளரின் அறிக்கை ஒன்று கோடிட்டுக் காட்டுகிறது.

## சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள்

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் தேவையை விடக் குறைவாகவே காணப்படுகின்றன. அதனால் சேவையில் ஒரு தொய்வு காணப்படுகின்றது. வட பகுதியில் இயங்குகின்ற உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளின் எண்ணிக்கை வருமாறு:

மன்னார் - 4
கிளிநொச்சி - 4
வவுனியா - 3
முல்லைத்தீவு - 2
யாழ்ப்பாணம் - 22

இந்தப் புள்ளிவிபரத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள், வைத்தியம் தேவைப்படும் சமூகத்தின் பெரும் பகுதியினரைத் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை என்பது புலனாகிறது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், நகர சபைப் பிரதேசங்களில் உள்ளூராட்சிக்குரிய சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று தானும் இல்லை. இந்த நிலையில் எமது மரபாகத் தொடர்ந்து வரும் சித்த ஆயுர்வேத வைத்தியத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சி சரியான முறையில் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை. மேற் பூச்சான அளவிலேயே சேவை நடைபெறுகிறது. இக் குறையை நீக்குவது குறித்து முழு விபரங்கள் அடங்கிய திட்ட முன் வரைவுகளும் இல்லை

## எதிர் நோக்கும் பிரச்சினைகள்

வட பகுதியில் உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் நன்கொடை வழங்கப்படுகிறது. வட பகுதியிலுள்ள விலைவாசிகள் ஏற்றம் மற்றும் தேவையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மேலோட்டமான முறையிலேயே நன்கொடை தரப்படுகின்றது. பிரதேச சபைக்கு 90 சதவிகிதம், நகர சபைக்கு 75 சதவிகிதம், மாநகர சபைக்கு 50 சதவிகிதம் என்ற அடிப்படையிலேயே நன்கொடை ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நன்கொடையானது முன்பு தயாரித்து அனுமதிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. அத்திட்டத்தின் அடிப்படையில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் தற்போது சேவை செய்ய முடியாது என்பது யாவரும் அறிந்ததே. கொழும்பிலிருந்து கிடைக்கும் நன்கொடையிலேயே பெரும்பாலும் வட பகுதியில் சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகள் தங்கியுள்ளன என்று தெரிகிறது. இப்போது வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சினால் ஆயுர்வேதபணிப்பாளர் என்ற பதவி நிலை உத்தியோகம் வழங்கப்பட்டுள்ளது அதிகாரப் பரவலாக்கல் திட்ட நடைமுறையின் கீழ் சுக்குமாந்தடி கொழும்பு ஆயுர்வேத ஆணையாளர் கையிலா அல்லது மாகாண ஆயுர்வேதப் பணிப்பாளர் கையிலா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகள் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளன. ஒரு பக்கம் போக்குவரத்துத் தடையும் பொருளாதாரத் தடையையும் குறுக்கிடுகின்றன மறுபக்கம் மருந்து மற்றும் மூலிகை வகைகளைப் பெறமுடியாத நிலையைச் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் சிறந்த சேவையைச் செய்ய முடியாத நிலையும் உருவாகியுள்ளது இதனை ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருதி எதிர்கொண்டு தவிர்ப்பதற்கான மாற்றுவழிகள் இப்போது உணரப்படுகின்றன

இந்த வைத்தியத் துறையை மக்கள் பெருமளவில் நாடுகின்றார்கள் இல்லை என்ற பார்வையும் உள்ளது சித்த ஆயுர்வேதம் எந்தமாதிரியான அணுகுமுறையைப் பின்பற்றி மக்கள்தளத்தைச் சென்றடைதுவ என்பதற்கான திட்டம் இதுவரை தயார் செய்யப்படவில்லை என்றே கூறலாம். சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளை எதிர்நோக்கும் பிரச்சினைகள் வருமாறு;

- நிதிப் பற்றாக்குறை
- வைத்தியசாலைகள் பற்றாக்குறை
- உதவியாளர் பற்றாக்குறை
- மருந்துத் தட்டுப்பாடு
- ஏற்ற கட்டட வசதியின்மை
- ஆர்வமின்மை

உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர் வேத வைத்திய சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமானால் அபிவிருத்தியைப் பாதிக்கும் காரணிகள் அடையாளம் காணப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது அவசியம். தவறினால் இதனால் ஏற்படும் இழப்பு மக்களுக்குத்தான்; பதவிகளுக்கு அல்ல. அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு மூலிகை அபிவிருத்தி, மருந்து தயாரித்தல், நிர்வாகம் ஆகியவை குறித்த குறுங்கால-நெடுங்காலத் திட்டங்களைத் தயாரிக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. ஆனால் ஆச்சரியங்கள் எங்குதான் இல்லை? மூலிகை அபிவிருத்தி மற்றும் மருந்து தயாரித்தல் ஆகியவை சம்பந்தமான இரண்டு பரிந்துரைகளே கையளிக்கப்பட்டன. நிர்வாகம் தொடர்பான பரிந்துரை இன்று வரை சமர்ப்பிக்கப்படவில்லையாம் இதற்கு அதிகாரிகளின் அக்கறையின்மையே காரணம்என்பது ஒரு புறம் இதில் மற்றொரு பரிமாணமும் இருக்கிறது. அதைத்தான் நாம் விசேஷமாகக் கவனிக்க வேண்டும். சித்த ஆயுர்வேத வைத்தியத் துறையைப் பற்றி உணர்வே இல்லாத சிலர் இதை முக்கியமாக எடுத்துக் கொள்ளத் தவறியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

சித்த ஆயுர்வேத வைத்தியத் துறைக்கு இல்லத நிர்வாக வசதி மற்றும் அபிவிருத்தித் திட்டம் ஆங்கில மருத்துவத்துக்கு உண்டு இது போன்று சித்த ஆயுர் வேத வளர்ச்சிக்கான ஒரு திட்டத்தை வகுப்பதும், நிர்வாக வசதிகளை ஏற்படுத்துவதும் அதிகாரப் பொறுப்பிலுள்ளவர்கள் செய்ய வேண்டிய காரியமாகும்.

## மருந்தும் மூலிகைகளும்

மருந்து மூலிகைகளுக்கு கொழும்பு ஆயுர்வேத ஆணையாளரிடம் கையேந்தும் நிலை இப்போதும் இருந்து வருகிறது. உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர் வேத வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு தலா இரண்டு ரூபா என்ற அடிப்படையில் சித்த ஆயுர் வேத வைத்தியசாலைகளுக்கு ஆயுர்வேதஆணையாளரால் மானிய உதவி வழங்கும் வழிமுறையும் உள்ளது இந்தப் பணத்திலிருந்து அவசர தேவைக்காக 25 சதவிகித மருந்துகளை உள்ளூரிலேயே கொள்வனவு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது. மிகுதி அவசியமான எல்லா மருந்துகளையும் கொழும்பில் தான் பெற வேண்டும் என்று மறைமுகமாகக் கட்டாயப்படுத்தப் பட்டது போல் இத் திட்டம் உள்ளது மற்றும்படி, நோயாளிகளுக்குத் தலா இரண்டு ரூபா என்ற வகையில் வழங்கப்படும் மானியத்தை நியாய உணர்வுடைய யாருமே ஏற்றுக் கொள்ள முடியாது. இதை எதிர்த்து நியாயம் கேட்கும் தெம்பும் இல்லை இப்போது தான் வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் ஆயுர்வேத பணிப்பாளர் இரண்டு ரூபா மானியத்தை இருபது ரூபாவாக உயர்த்தும் படி மத்திய அரசைக் கேட்டிருப்பதாக ஊர்ஜிதம் அற்ற செய்திகள் தெரிவிக்கின்றன

இது நாள் வரை மருந்து உற்பத்தியை இரு தனியார் நிறுவனங்களும் செய்து வருகின்றன போக்குவரத்துத் தடை, பொருளாதாரத்தடை மற்றும் விலைவாசி உயர்வுகளால் மருந்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அச் சுறுத்தல்களுக்கு ஒரு சவாலாக தெங்கு பனம் பொருள் சங்கம், கோ-பாம என்ற பெயரில் ஒரு மருந்து உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்துள்ளது. இந்த நிலையம் உற்பத்தி செய்யும் மருந்து வகைகளுக்கு உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளின் ஆதரவு இருக்கிறது, உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகளின் தரம் சம்பந்தமான விஷயத்தில் தரமும் உத்தரவாதம் செய்யப்படுகிறது, பல நெருக்கடிகள் மத்தியிலும் தெங்குப் பனம்பொருள் சங்கத்தின் மருந்து உற்பத்தி ஆறுதல் பெற உதவுகிறது, தேவையையும் ஓரளவு பூர்த்தி செய்கின்றது.

இனி, இராணுவ நடவடிக்கை மூலிகை சேகரிப்பதையும் பெரிதும் பாதித்துள்ளது. தீவுப்பகுதி, குறிப்பாக நெடுந்தீவு மூலிகை அதிகமாகக் கிடைக்கும் இடமாகும் இராணுவ ஆக்கிரமிப்புப் காரணமாக மூலிகை தேடி அங்கு போக முடியாதநிலை ஏற்பட்டுள்ளது, இதனால் மருந்து உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலிகைகள் 62 என உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களம் பட்டியலிட்டுள்ளது இதில் பெரும் பகுதி மூலிகைகள் நெடுந்தீவிலேயே கிடைக்கின்றன. மூலிகைத் தட்டுப்பாட்டை ஈடுசெய்யும் வகையில் கிளிநொச்சியில் ஒரு மூலிகைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு எல்லா மூலிகைகளையும் வளர்க்க முடியாத நடைமுறைப் பிரச்சினைகளும் உள்ளன. உள்ளூரில் வளரக் கூடிய அனைத்து மூலிகைகளையும் வளர்ப்பதற்கு நீண்டகால அடிப்படையில் கடினமான உழைப்பு அவசியமாகிறது மற்றும்படி வெளியூரில் இருந்து கிடைக்கக் கூடிய 53க்கும் அதிகமான மூலிகைகளுக்கு நாம் ஆயுர்வேத ஆணையாளரிலேயே தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது வெளியூரிலிருந்து பெறக் கூடிய மூலிகைகளுக்கான கோரிக்கை உரக்கக் கேட்கவில்லை என்று வடக்கு-கிழக்கு மாகாண ஆயுர்வேத பணிப்பாளர் டாக்டர் உரோ மகேஸ்வரன் தெரிவிக்கிறார் மருந்து மற்றும் மூலிகைக்கான கோரிக்கை வலுப்பெற்று மகஜர்கள் தன் கைக்கு எட்டினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்கலாம் என்கிறார் அவர்

## மருந்துக் கலவையாளர் சம்பளம்

வடபகுதியில் உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர்களின் நிலையும் பெரும் குறையாகவே யுள்ளது, அவர்களுக்குரிய சம்பளத்திட்டமான 19, 680- 9 × 480, 8 × 600- 28,000 இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை, மருந்துக் கலவையாளர் இரண்டு வருடப் பயிற்சியைப்பெறாத காரணத்தால் அவர்களைக் குறைந்தசம்பளத்திட்டமான 16,560 - 23 × 480-ல் அமர்த்தும்படி 1992 பெப்ரவரியில் கிடைக்கப்பெற்ற சுற்று நிருபம் ஒன்று கூறுகின்றது. இதன்படியே சம்பளக் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. வைத்தியத்துறையை அரசியல் நோக்குடன் அணுகியதால் இந்த ஆபத்து வட பகுதியில் உள்ள மருந்தாளர்கள் உரிய சம்பளத்தில் அமர்த்தப்படுவார்கள் என்று அண்மையில் வாய் மூலம் உறுதியளிக்கப்பட்டது இதற்கு எழுத்து மூலமான எந்த உறுதியுரையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தரப்படவில்லை. எது எப்படியிருந்தாலும் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறாமல் இருந்தால் வரவேற்க வேண்டியது தான்

## தெரிவு செய்யப்பட்ட சபைகள்

தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகள் அபிவிருத்தி சபைகள் (1981) மற்றும் பிரதேசசபைகளினால்(1988) கடுமையாகப் பாதிக்கப்பட்ட அமைப்புக்களில் உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளும் அடங்கும் உள்ளூராட்சி நிர்வாகத்தைச் சுவீகரித்துக் கொண்ட அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் லாபத்திற்காக உள்ளூராட்சி சபைகளைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டனர் அரசியல் என்ற எல்லையைக் கடந்துவிரிவான சமுதாயப் பிரச்சினையில் அக்கறைகாட்டவில்லை. ஏதோ மக்களால் தேர்ந்தெடுத்த மனிதர்கள் என்று ஏனோதானோஎன்று நடந்து கொண்டார்கள்இதனால் அடிப்படையில் காலங் காலமாக சித்த ஆயுர் வேத வைத்திய சாலைகள் புறக்கணிக்கப்பட்டன என்பதைக் கடந்த கால வரலாறு காட்டுகிறது.

இப்போது உள்ளூராட்சி சபைக்குரிய சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளையும், எதார்த்த நிலையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பல ஆக்கபூர்வமான திட்டங்கள்மேற்கொள்ளப்படுகின்றன பெரும் சுமையால் அழுத்தப்பட்டிருக்கும் சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகள் இனிச் சீராக அபிவிருத்தியடையும் என்பது இத் துறையில் ஆர்வம் கொண்டவர்களின் எதிர்பார்ப்பாகும்-

# சாவின் விளிம்பில் நின்றபோதும்

# தன்மானம் இழக்காத சோமாலிய மக்கள்

சென்ற மாதம் 31ஆம் திகதியன்று மிஞ்சியிருந்த அமெரிக்கப் படை வீரரும் மொகாதிசு நகரக் கரையிலிருந்து தாயகம் திரும்பிய போது எவரும் வழியனுப்ப - வாழ்த்திவிடை சொல்ல வரவில்லை, வழமையான கொடியிறக்கல் நிகழ்வைக் கூட மேற்கொள்ளும் மனநிலையில் அமெரிக்கப்படைவீரர் இருக்கவில்லை. எப்போது சோமாலியாவில் இருந்து வெளியேறுவோம் என்றே அவர்கள் மனநிலை இருந்தது. சனாதிபதி கிளின்டன் மார்ச் 31-ம் திகதிக்குள் தனது படை வீரர் சோமாலியாவை விட்டு திரும்பிவிடுவர் என்று அறிவித்த காலம் தொட்டு அமெரிக்கப் படை வீரர் மொகாதிசுவின் துறைமுகத்தை அண்டியும் விமான நிலையத்திற்குள்ளும் பலத்த பாதுகாப்புடன் அடைந்து கிடந்தனர். வெளியில் வருவதே இல்லை. நாடு திரும்பும் வேளையில் எதுவும் அசம்பாவிதங்கள் நடைபெற்று அவமானப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. சோமாலியாவில் தரித்து நின்ற அமெரிக்கப் படைகளின் தளபதியான மேஜர் ஜெனரல் தோமஸ் மொன்ட்கோமரி "சோமாலியா எப்படிப் பட்டது என்று எவராலும்என்றும் அறிய முடியாது'' என்று இறுதியாகக் கூறினார். இக்கூற்றும் இந்நிகழ்வும் தமிழீழ மக்கள் மனதிலே சலனப் படமாக இந்தியப் படையினர் திரும்பிய நிகழ்வை ஓடவிடக் "கூடும்.

ஆனால் 35,000 க்கு மேற்பட்ட அமெரிக்கப் படையினர் 1992-ம் ஆண்டு சோமாலியாவுக்கு அனுப்பப்பட்ட போது எத்தகைய பிரமிப்பூட்டும் விளம்பரம் கொடுக்கப்பட்டது வானிலிருந்து தேவதூதர் சோமாலியா மண்ணிற்கு வந்தது போலவும் சோமாலியாவின் எலும்பும் தோலுமான சிறார்களை பரிவுடன் அணைக்கும் அமெரிக்கப் படையினர் மனிதாபிமானத்தின் சின்னம் போலவும் மேற்குலக தொடர்புச் சாதனங்கள் இவர்களை சித்திரித்தன. வறுமை, அறியாமை, குழுமோதலால் நாசமாகிப் போகும் ஒரு மூன்றாம் உலக நாட்டை, பட்டினியின் விளிம்பில் பரிதவிக்கும் இலட்சக்கணக்கான ஆபிரிக்க மக்களை காப்பாற்ற அமெரிக்கா எடுத்த புதிய முயற்சி- வகித்த பாத்திரம் போற்றப்படவேண்டியது என்கிற எண்ணமே இயல்பாக எவர்க்குள்ளும் தோன்றும் வண்ணமே இச் செயற்பாடுகள் அமைந்தன. முதலில் தனித்து தானாக சோமாலியா சென்ற அமெரிக்கா - பின் தனது புதிய உலக ஒழுங்கில் தானே வரித்துக் கொண்ட தனது பாத்திரத்திற்கேற்பஐ.நாவின் அமைதிப்படையணியில் தன்னையும் உட்படுத்தி இணைத்துக்கொண்டது. அப்போது மேலும் நம்பிக்கை பெருகியது. ஆனால் பின்னர் நடைபெற்ற பல குளறுபடிகள் காரணமாக நிலைமைகள் தலைகீழாகின. இன்று நிலைமை என்ன? அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகப் படைகள் சோமாலியாவில் அமைதி திரும்பாத நிலையில் தாம் தாயகம் திரும்புகின்றன. இப்போது மேற்குலகத் தொடர்பு சாதனங்கள் உருவாக்கும் கருத்து வடிவம் என்ன? ''மீண்டும் தொடங்கிய இடத்தில் சோமாலியா'' என்றும் '' சோமாலியச் சிக்கல் என்றும் முடிவிற்கும் வராது''என்றும் இந்தப் பழம்புளிக்கும் என்கிறதொனிப்பில் 'நியூஸ்வீக்' எழுதுகின்றது. இன்னொரு பக்கத்தில் ''அமெரிக்காவாலேயே முடியவில்லை இனி யாரால் முடியும்?'' என்றும் இப்போது சோமாலியாவில் உள்ள மூன்றாம் உலகத்தைச் சேர்ந்த குறிப்பாக இந்தியா பாக்கைச் சேர்ந்த 20,000வீரரும் என்ன செய்யமுடியும் ? வளங்களும் வசதிகளும் குறைந்த மூன்றாம் உலகப் படையணியிடம் அமைதியை கொண்டுவருவதற்கான அரசியல் உறுதிப்பாட்டோ, பலமோ இல்லையென்றும் அமெரிக்க டைம் ஆராய்கின்றது. ஆயினும் நடுநிலை ஆய்வாளர்களைப் பொறுத்தவரையில் அமெரிக்க, ஐரோப்பிய படைகள் வெளியேற்றம் குறிப்பது ஐ.நாவினதும் அமெரிக்காவினதும் முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்ததையே என்றும் இப்போதுள்ள படைகள் சோமாலிய மக்களின் சீற்றத்திற்கு உள்ளாகக் கூடும் என்று அச்சம் வேறு உள்ளதாகவும், தெரிவிக்கின்றனர்: அண்மையில் சோமாலியர் பலரை இந்தியப்படைகள் கொன்றதும் இந்தியப் படைவீரர்பலரை சோமாலியாபலியாக்கிய செய்திகளும் இப்போது வெளியாகத் தொடங்குகின்றன (ஏற்கெனவே கடந்த வருடம் யூன் மாதம் பாக் படைகள் 20க்கு மேற்பட்ட சோமாலியரைகொன்றபின் சோமாலிய மக்களின் கடும் வெறுப்புக்குள்ளாகியது தெரிந்ததே )

எனவே என்ன நடந்தது சோமாலியாவில் என்கிற கேள்விஇப்போதுஎங்கும் கேட்கப்படுகின்றது. 1990 பின்னான ஒரு புதிய உலகஒழுங்கு தோற்றம் பெற்றதற்கான செயற்பாட்டின் பிரதான வெளிப்பாடாக சோமாலியாவில் ஐ நாவின் நடவடிக்கைகள் அமைந்தன.

மூதன் முறையாக ஐ. நா. தனது வழமையான பணிகளை விட சோமாலியாவில் ஒரு பரந்துபட்ட அமைதிப் பணியை நிறைவேற்ற பாதுகாப்புச் சபையால் ஆணை வழங்கப்பட்டது. மனிதாபிமான பணிகட்கு புறம்பாக சோமாலியாவில் போரிடும் 12க்கு மேற்பட்ட குழுக்களின் ஆயுதங்களை களைந்து அமைதியை- தேசிய இணக்கமொன்றின்ன உருவாக்கி அங்கொரு புதிய ஆட்சி முறைமை- ஒன்றையே உருவாக்கும் பணி ஐ. நாவிடம் ஒப்படைக்கப்பட்டது. எதிர்கால ஐ.நாவின் செயற்பாடுகட்கு இது ஒரு முன்னோடித் திட்டமாகவும் ஐ.நா தரப்பில் கருதப்பட்டது எனவே 'சோமாலியாவில் ஐ. நாவின் நடவடிக்கைகள் (யுனொசொம்-UNOSOMZ) என்கிற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப்பணியின் விளைவுகள் குறித்து முழு உலகமுமே ஆர்வமாக அறிய காத்து நின்றது. ஆனால் இப்போது ஐ. நாவின் செயலாளர் கையில் மிஞ்சியிருப்பது சோமாலியாவில் முறை தவறி நடந்த ஐ. நாப் படைகள் - குறிப்பாக சோமாலிய மக்களை கிள்ளுக் கீரையாக மதித்து எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கியை தூக்கி பல்லாயிரக்கணக்கான சோமாலியரை குருதி வெள்ளத்தில் குளிப்பாட்டிய அமெரிக்க படைகளின் அத்துமீறல்கள் பற்றிய அறிக்கையே; (ஆனால் இவ்வறிக்கையை வெளியிட செயலாளர் தயக்கம் காட்டுவதாக பி.பி, சி, அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.)

எவ்வளவுதான் ஐ.நாவாக இருந்தால் என்ன, உலகின் மிகப்பாரிய இராணுவ பொறியமைப்பைக் கொண்டுள்ள அமெரிக்கர் என்றால் என்ன- தளநிலைமைகள் குறித்த போதிய தகவல்கள் இல்லாமல் தலையிட்டு போன பின் தகுந்த பின்னூட்டல் இல்லாமல் தான்தோன்றித்தனமாக நடந்ததாலே இந்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது இந்த வகையில் ஐ.நாவின் செயலாளர் செயற்பட்டு ஏனையோரையும் வழிதவறிப் போகச் செய்ததாக அமெரிக்க தரப்பில் ஐ.நா மீது குற்றச்சாட்டு இப்போது வேறு சுமத்தப்படுகின்றது. ஜெனரல் அய்டீட்டை இலக்கு வைத்து அவரை வேட்டையாட கிளம்ப பரிந்துரைத்த பூட்ரோஸ்காலியின் பின்னணி பற்றி அய்டீட் எழுப்பிய சந்தேகம் இப்போது சரியாகிப்

> "சோமாலியா எப்படிப்பட்டது என்று எவராலும் என்றும் அறியமுடியாது. நீங்கள் அங்கு வாழாவிட்டால் அங்கு என்ன நடக்கின்றது என்பதே உங்களுக்கு புரியாது - நாங்கள் அவர்கட்கு உதவப்போய் அவர்கள் தலைவிதியை தீர்மானிக்க முற்பட்டு எல்லை மீறி விட்டோம். இப்போது நாங்கள் வெளியேறுகிறோம். தங்கள் தலைவிதியை அவர்களே தீர்மானிக்கட்டும்''.
>
> (அமெரிக்கப் படை வீரரின் கூற்றுக்கள்)

போய்விட்டது. அய்டீட்டின் பரம எதிரியாக இதுவரையிருந்த இன்னொரு குழுத்தலைவரான அலி மகதி மொகமதை எகிப்து அரசு முன்னர் தொட்டு ஆதரித்து வருவது தெரிந்த விடயமே. எனவே முன்னர் எகிப்தின் வெளிநாட்டமைச்சராக இருந்து ஐ.நாவின் செயலாளரான பூட்ரோஸ் காலி தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டை'கடைப்பிடிப்பதாகவும் அய்டீட்டின் மேல் அவருக்கு உள்ளூர வெறுப்பு தொடர்ந்து இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எனவே அய்டீட் தொடக்கத்திலிருந்தே ஐ.நா. படைகள்வருவதை விரும்பவில்லை. வந்தபின் அவரது சந்தேகம் வலுத்ததால் அமைதிப்படை மீது அவர் தாக்குதல்களை மேற்கொண்டார். கோபம் கொண்ட பூட்ரோஸ் காலி அமெரிக்காவைக் கூட கலந்தாலோசிக்காமல் செயற்பட்டார். ஐ.நாவால் தேடப்படுகின்ற கொலைக் குற்றவாளியாக அய்டீட்டை பிரகடனம் செய்து அவரை கைது செய்ய அமெரிக்கப் படைகள் உதவியையும் நாடினார் இதன் விளைவு இறுதியில் பல்லாயிரக்கணக்கான சோமாலியர் இறப்பில் முடிந்ததோடு மட்டுமல்ல ஐ, நாவின் அமைதிப் பணியே தடம்புரள வேண்டியதாயிற்று. ஏனென்றால் சோமாலிய மக்களுக்கும் போராளிகட்கும் எவ்வகையிலும் அமெரிக்க இராணுவத்தால் வேறுபாட்டைக் காணமுடியவில்லை. அதிலும் குறிப்பாக தமது இலக்குகள் குறித்து எவ்வித தகவலும் இல்லாத நிலையில் அமெரிக்க விமானிகள் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதல்கள் ஏவப்பட்ட தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் சோமாலியர் குருதியை ஆறாக ஓடவிட்டன. இவ்வாறான அமெரிக்க இராணுவத்தின் தாக்குதல்கள் பற்றிய ''நியுயோர்க்டைம்ஸ்'' பத்திரிகையின் அறிக்கையொன்றில் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்த விமானங்களிலிருந்தும் உலங்குவானூர்திகளிலிருந்துமே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பகலில் தாக்குதல்கள் கடற்படையினர் மேற்கொண்டால் இரவில் தத்தமது கடற்படைக் கப்பல்கட்கு இப்படையினர் சென்றுவிடுவர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஏற்கெனவே நாசமாகியிருந்தசோமாலியாவை மேலும் நாசமடைய வழிவகுத்த இத் தாக்குதல்களை அமெரிக்கா மேற்கொண்டு சோமாலியாவில்காலூன்ற விரும்பியமைக்கு கிளின்டனுக்கு இன்னொரு நோக்கமும் இருந்ததாக இப்போது கூறப்படுகின்றது. வளைகுடாப் பகுதி கொந்தளிப்புக் கருதியும் சூடான் போன்ற பகுதிகளில் தலையெடுக்கும் இசுலாமிய அடிப்படைவாதம் போன்றவற்றை தடுக்க, கண்காணிக்க முடியும் என்றும், ஏடன் குடா, இந்து சமுத்திரத்தின் ஒரு பகுதியை கட்டுப்படுத்த முடியும் என்றும் அமெரிக்கா நமபியதாக தெரிகின்றது. ஆயினும் சோமாலிய மக்களை ஆயுத வல்லாண்மையை காட்டி அழுத்தங்களை பிரயோகித்து அவர்களை அடிபணிய எடுத்து வைத்த முயற்சி பெரும் தோல்வியையே இறுதியில் விட்டதாக கூறப்படுகின்றது. அத்தோடு ஐ, நா செயலரும் இப்போது தனது வாலைச் சுருட்ட வேண்டி ஏற்பட்டுள்ளது. அமெரிக்க படையினரின் வெளியேற்றம் அவரை பெரும் இக்கட்டில் தள்ளிவிட்டது. எனவே யுனொசொம் இப்போது தனது முன்னைய நோக்கங்களை கைவிட்டு ஆயுதக்களைவுப் பணியை நிறுத்தி மனிதாபிமான பணிகளில் மட்டுமே இப்போது கவனம் செலுத்தவும், எது எப்படி இருந்தாலும் இன்னும் இரண்டு வருடத்திற்குள் சோமாலியாவிலிருந்து ஐ. நா. படைகள் முற்றாக வெளியேற வேண்டும் என்றும் முடிவாகியுள்ளது.

இப்போது சோமாலியா மக்களுக்கும் 12க்கு மேற்பட்ட அவர்களது குழுத்தலைவர்கட்கும் பட்டறிவு சில பாடங்களை கற்பித்திருப்பதாக தெரிகின்றது. வெளியார் தலையீடின்றி தமக்கென ஒரு தற்காலிக இடைக்கால அரசை அமைக்கும் முயற்சிகளில் சில ஆபிரிக்க நாடுகளின் உதவியோடு கணிசமான முன்னேற்றம் இவர்கள் கண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கென்யத் தலைநகர் நைரோபியிலே பெரும்பாலும் தங்கியிருக்கும் அய்டீட் மிக முக்கியமான பேச்சு வார்த்தைகள் ஏனைய சோமாலிய இனக்குழுக்கள் தலைவர்களோடு மேற்கொண்டு வருவதாக தெரிகின்றது.

இதுவரை காலமும் எலியும் பூனையுமாக தமக்குள் சண்டையிட்ட அய்டீட்டும் அலிமகாதி மொகமட்டும் அண்மையில் நைரோபியில் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தி இணக்கம் ஒன்றினைக் கண்டிருப்பதாக கூறப்படுகின்றது; இது ஒரு நல்ல திருப்பமாக அமைய வேண்டும் என்றே எல்லாரும் எதிர்பார்க்கின்றார்கள். இல்லாவிட்டால் மீண்டும் கடும் மோதல்கள் தொடரும் அபாயம் இருப்பது தெரிகின்றது எனவே சோமாலிய மக்கள்

பாலகுமாரன்

இப்போது சந்தித்துள்ளது. ஐரோப்பிய படைகளின் வெளியேற்றம் என்பது சோமாலிய மக்களின் வெற்றியை அவர்களது மனவுறுதியை எடுத்துக் காட்டும் சம்பவமாகிவிட்டது.

இறுதி நேரத்தில் தமது தவற்றினை உணர்ந்தோ அல்லது வேறு வழியில்லாமலோ இவர்கள் ஜெனரல் அய்டீட்டோடுநல்லுறவைப் பேணவே முயன்றனர். கொலைக் குற்றவாளியாக பிரகடனம் செய்யப்பட்டவர் இப்போது நண்பராகின்றார். ஐ. நாவோ இதுவரை காலமும் தான் பிடித்து வைத்திருந்த அய்டீட் ஆதரவாளரை அமைதியாக விடுவித்துவிட்டது. அய்டீட் பெரும் தலைவராக வீரனாக இப்போது சோமாலியாவில் மதிக்கப்படுகின்றார். அவர் புதிய சூழலுக்கேற்ப தன்னை மாற்றி ஒரு இராசதந்திரி போல இப்போது செயற்பட தொடங்குகிறார், ஆபிரிக்க நாடுகள் பலவற்றோடு நல்லுறவை ஏற்படுத்துகின்றார். இசுலாமிய அடிப்படைவாதக் கோட்பாட்டை ஆதரிப்பவர் போல் தாயகத்தில் தோற்றம் கொடுக்கிறார். சூடான் போன்ற நாடுகள் அவருக்கு இப்போது உதவத்தொடங்கி தமக்கான தீர்வை தாமே காணவேண்டிநிலை இதற்கு சாதகமாக கால நிலை அவர்கட்குப்இப்போது உதவுகின்றது. 1991, 1992கொடும் வரட்சிக்கு பின் சாதகமாக இப்போது இருக்கும் கால நிலையை பயன்படுத்தி மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை இப்போது மேற்கொண்டு வருவதாகவும் இம்முயற்சிகள் பயனளிக்க தொடங்கியிருப்பதாகவும் தெரிகின்றது. ஐ நா தலையிடாத உள்ளூர் பகுதிகளில் ஒரு உள்நாட்டு பொருண்மிய முறை தோற்றம் பெறுகின்றது. மக்கள் இயல்பான பொருண்மிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், சமுதாய ஒழுங்கையும் சட்டத்தையும்அவ்வப்பகுதிமுதியோர் மீண்டும் ஒழுங்குபடுத்தி அமைதி பேணமுயல்வதாகவும் நேரில் பார்த்தோர் தகவல்கள் தருகின்றனர்.

எனினும் முக்கிய துறைமுக நகரான கிஸ்மாயுவில் இப்போது மீண்டும் சண்டைகள் நடப்பதாக கூறப்படுகின்றது. இக் கலவரங்கள் பைடோவா பகுதிக்கும் பரவக்கூடும். இதனால் அங்கு நிலைகொண்டிருக்கும்'இந்தியப்படை பற்றி இந்தியத் தரப்பில் பெரும்

(10ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# இப்படித்தான்....

சாவித்திரி அத்துவிதானந்தன்

கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சந்தியில் சனம் கூடத் தொடங்கிவிட்டது மாலை 5மணி தாண்டிவிட்டால் இது வழமையான நிகழ்ச்சிதான்.

பலவகைப்பட்ட சனங்கள் சந்தியின் முகப்பில் இருக்கும் அந்தக் கடையின் முன் விறாந்தையில் வைக்கப்பட்டிருக்கும் பெரிய மேசையைச் சுற்றி ஒரு கும்பல் நிற்கும்,

புஷ்பா தங்கத்துரை, பாலகுமாரன், ரமணிச்சந்திரன்' சிவசங்கரி, சுஜாதா, ராஜேஸ்குமார்... இன்னும் பலர்-மேசையில் குவிந்து கிடந்த புத்தகங்களின் முன் அட்டைகளில் இருந்து, சுற்றி நிற்கும் ரசிகர் கூட்டத்தைப் பார்த்துச் சிரிப்பார்கள்.

மேசைச் 'சுற்றிவளைப்பு' மேற்கொள்ளும் அணியில் பாடசாலை -பல்கலைக்கழக-மாணவ மாணவியர்கள் பிரதான அங்கம் வகிப்பார்கள்.

இத்தனைக்கும்அந்தக்கடை புத்தகக்கடை அல்ல. பலசரக்குக் கடை.

அந்நிய மோகம் எம் மத்தியில் ஆழமாய் வேருன்றி விட்டதால் இந்திய எழுத்தாளர்களின் - தரமான - தரமற்ற- எல்லாப் படைப்புகளுமே எம் இளையபரம்பரையினரை ஈர்த்துக் கொண்டிருப்பதை நன்றாகவே அறிந்திருந்ததால், தமது வியாபாரம் பெருகுவதற்காகக் கடை முதலாளிகள் கையாளும் 'வியாபாரத் தந்திரம்' இது

அந்தக் கடைக்கு முன்னால் -எதிர் முனையில் - ஒரு வீடியோக் கடை.

அங்கேயும் இந்திய ஆக்கிரமிப்புத்தான்

வெவ்வேறு கோணங்களில் தென்னிந்திய திரைப்படங்களின், நடிக நடிகையரின்-படங்கள் ஏராளமாய் அந்தக் கடைக்கு முன்னால் அணிவகுப்பில் நிற்கின்றன.

அந்த விளம்பரப்படங்களை வாய்பிளந்து ரசிப்பதற்காகவே அந்தச் சந்தியில்கூடும் ஒரு கும்பலும் உண்டு.

''ராஜ்.. ரமணிச்சந்திரன்ரை புத்தகம் இருந்தால் எனக்கு எடுத்துத் தாடி...'' பேசையில் புத்தகங்களைக் கிளறிக் கொண்டிருந்த ஒரு பல்கலைக்கழக மாணவி அருகில் நின்றவளிடம் இப்படிக் கூறுகிறாள்

''உனக்கு எப்ப பார்த்தாலும் ரமணிச்சந்திரனின்ரை கதைதான் எல்லாக்கதையும் ஒரே மாதிரித்தான் இருக்கும்'' இப்படி அலுத்துக் கொண்டே கூறிய ராஜிஎன்ற பெண்ணும் ஆவலோடு தேடிக் கொண்டிருந்தது ரமணிச் சந்திரனைத்தான்!

நாகரிகமாக உடையணிந்து 'அவன்' கடையை நோக்கி வருகிறான். தோளில் துணிப்பை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது இருபத்தைந்து வயதுக்குள்தான் இருக்கும்.

''ரெண்டு பிறிஸ்டல்'' என்று கூறிப் பணத்தைக் கடைக்காரன் இருந்த மேசையில் வைக்கிறான்.

சுற்றிவரக் கண்களை ஓட விட்டுச் சூழலை அவதானித்தபடியே சிகரெட்டைப் பற்ற வைக்கிறான்:

கடையில் வருவோரும் போவோருமாக வியாபாரம் மும்முரமாய் நடந்து கொண்டிருக்கிறது.

யாரையோ அல்லது எதையோ எதிர்பார்த்து நிற்பது போன்றபாவனையில் 'அவன்' கடைவாசலிலேயே நின்று கொண்டிருக்க,

''தம்பி...சீனிஇருக்கோ...?'' என்று கேட்டபடி கந்தையர் கடைக்குள் நுழைகிறார்

''இருக்குதையா...ஆனா .. விலைதான்கொஞ்சம்கூட ..''

''ஏன்சீனிதட்டுப்பாடோ?'

''ஓம் ஐயா மூடைக்கு ஆயிரம் ருபாய் கூடக் கேக்கிறாங்கள்... பின்னைஎடுக்காம வந்திட்டம்...''

''அது சரி தம்பி ... இப்ப உங்களிட்டை இருக்கிறது முந்தி எடுத்த சீனி மூட்டை தானே... ? அதுக்கேன் விலை கூட்டுறியள்?''

கடைக்காரர் முகத்தில் அசடு வழிகிறது.

கந்தையரின் கேள்விக்கு என்ன பதில் சொல்லலாம் என அவர் குழம்பிக் கொண்டிருந்த போது,

'அவன்' புத்தக மேசைப் பக்கம் நகர்கிறான்.

''என்ன கந்தையாண்ணை ...கன நாளாய் உங்களை அங்காலை வீடுப்பக்கம் காணேல்லை?'' என்ற குரல்கேட்டுக் கந்தையர் திரும்புகிறார்.

''அட ... நித்தியே ...? ரெண்டு மூன்று நாள் உன்னட்டை வந்தனான் . மனிசி சொன்னதே... உனக்கு இப்ப இயக்கத்திலே ஏதோ வேலை கிடைச்சிருக்காம் எண்டு சொல்லிச்சுது ...''

''ஓமண்ணை ... வேலை பாக்காமை இந்த நாளிலை என்னெண்டு சீவியம் போறது ? பொடியலிட்டைத் தான் கேட்டன் ... அவை ஒரு வேலை தந்தினம்...''

''எங்கை வேலை ...?என்ன வேலை செய்யிறணி ?''

'அவன்' காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறான்.

மேசையில் கிடந்த புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்த அவனது கவனம் முழுவதும் கந்தையர் நித்தியின் உரையாடலிலேயே பதிந்திருக்கிறது.

''அதண்ணை - இயக்கத்தின்ரை அரசியல் துறை Main Office இலை தான் வேலை. பொறுப்பாளரைச் சந்திக்க வாறவையின்ரை பேர்கள் பதிவு செய்து வைக்கிறதும்... வேறை வேலைகளும் செய்யிறனான் ...'' கூறிக்கொண்டே அன்றைய பத்திரிகைஒன்றை நித்தி எடுத்துப் புரட்டுகிறான்.

''தம்பி அரைக்கிலோ சீனி கட்டு...'' - சொல்லிக்கொண்டிருக்கையில் கந்தையருக்கு, நித்தியின் சின்னம்மாவை முன்தினம் கண்ட ஞாபகம் வருகிறது:

''சொன்னாப் போலை... நித்தி... நேற்று உன்ரை கமலாச்சின்னம்மாவைக் கண்டனான்...''

''அப்ப சாவகச்சேரிக்குப் போயிருக்கிறீங்கள் ...'' பத்திரிகையை விட்டு கண்களை எடுக்காமலேயே நித்தி கேட்கிறான்:

''ஒரு அலுவலாய்ப் போனனான்...... சாவகச்சேரிச் சந்தைக்குள்ளைதான்உன்ரை சின்னம்மாவைக் கண்டனான் ... உன்னைப்பற்றியும் விசாரிச்சா...''

' சாவகச்சேரி மாக்கெற்றடியிலை கிட்டுமாமான்ரை தூபி பார்த்தனீங்களே...?''

''பார்த்தனான் வடிவாயிருக்கு... வேலை எல்லாம் முடிஞ்சு இப்ப பெயின்ற் அடிக்கினம்...''

''திறப்பு விழா நடக்கப் போகுதல்லே ...... அதுதான் பெயின்ற் அடிக்கினம்போலை,

'அவன்' உஷாராகிறான்.

''திறப்பு விழா நடக்கப் போகுதே......? எப்பதம்பி ..? பேப்பரிலை ஒண்டும் போடேல்லை...'' ஆவலுடன் கந்தையர் கேட்கிறார்.

''நாளண்டைக்குப் பின்னேரம் அஞ்சு மணிக்குத் திறப்பு விழா''

''உனக்கு வடிவாய்த் தெரியுமே...? நான் கட்டாயம் அதுக்குப் போக வேணும்...''

அரசியல் துறை Office இலை தானே நான் வேலை செய்யிறன் அண்ணை முதலே எங்களுக்கு நியூஸ் எல்லாம் தெரிஞ்சிடும்... பேப்பரிலை போடுறதென்டால் நாளண்டைப் பேப்பரிலை தான் வரும் ..''

''உன்னட்ட இப்ப கேட்டது நல்லதாய்ப் போச்சு - கிட்டற்றை நினைவாலயத் திறப்பு விழாவுக்குப் போகாமை விடுறதே...?'' - கந்தையர் சில விநாடி மௌனமாய் நின்று கிட்டுவை நினைத்துப் பார்க்கிறார்.

'' இயக்கப் பொறுப்பாளர் மாரும் கூட்டத்திலை பேசுவினம் தானே?''

நித்தியிடம் கேட்கிறார்.

இப்பொழுது 'அவன்' இவர்களுக்கு மிக அருகில்... ''ரெண்டு முக்கிய பொறுப்பாளர்மாரும் நாலைஞ்சு (Area) 'ஏரியாப்' பொறுப்பாளர்மாரும் பேசுவினம் என்ட மாதிரி இண்டைக்கு அங்கை கதைச்சவை''

''இந்தாருங்கோ சீனி...'' கடைக்காரர் பொட்டலத்தைக் கந்தையரிடம் கொடுக்கிறார்.

அப்ப... நித்தி . நாளண்டைக்குப் போகேக்கை கமலாவைக் கண்டா, நீ விசாரிச்சனி எண்டு சொல்லி விடுறன்... நான் வரட்டே தம்பி...?''

''ஓமண்ணை வாருங்கோ...''

நாளை மறு தினம் திறப்பு விழாவுக்குப் போகும் கற்பனைகளுடனும் கையில் சீனிப் பொட்டலத்துடனும் கந்தையர் வீடு திரும்புகிறார்.

சிறீலங்கா இராணுவத்துக்கு உளவு சொல்ல 'விஷயம்' தேடிவிட்ட வெற்றிக் களிப்போடு 'அவன்' கடையை விட்டு வெளியேறுகிறான்.

ஃ ஃ

இரண்டு நாட்கள் கழிந்தன,

தமிழ்த் தினசரிகள் அன்று காலையில் தாங்கி வந்த பிரதான தலைப்புச் செய்தி.

சிறீலங்கா விமானக் குண்டு வீச்சில் 9 அப்பாவி மக்கள் பலி! பலர் படுகாயம்! சாவகச்சேரியில் கோரச் சம்பவம்!

## அம்மாவின் ஆணை

மகனே,..
தூக்கம் உன்னிடம்;
தோற்று விட்டது
உன்-
தொண்டைக்குள்
துயிலும்;
ஏக்கம்-
எதுவென்று-
எனக்குத் தெரிகின்றது.
இடி முழக்கத்தை-
கண்டு-
ஏங்கிய நீ-
இன்று-
வெடி முழக்கத்தை-
கண்டு-
துடிதுடிக்கின்றாய்
தூக்கம்-
உன்னிடம்;
தோற்றுவிட்டது.
வெட்கம்-
உன்னிடமிருந்து-
வெளியேறிவிட்டது.
பள்ளிகள்-
உனக்கு-
புத்தகங்களாகின-
ஆகவே -
புத்தகங்களை
பள்ளிகளில் விட்டிடு.
தொண்டைக்கு ளிருக்கும்
ஏக்கத்தை-
எதுவென்று-
எனக்குச் சொல்லிடு.
உனக்கு-
நான் முரணல்ல.
எனக்கு - நீயும்
முரணல்ல.
தலைமுறைகள்-
வாழ்வதற்கு-
தலைகொடுத்தவன்-
தலை முறையில்
வந்தவன் - நான்-
நீயும்-
உனது-
தலைமுறை-
வாழ்வதற்கு-
நிலை-
தவறாது நிற்பதற்கு
விடைதருகின்றேன்-
வென்றுவா.

-ராஜா புலேந்திரன்

## பழசும் புதுசும்
# எல்லாரும் உவப்பது

அமைந்த குணங்கள் பலவும் உடையீர். மீன் முள் போன்ற நரை முதிர்ந்த கன்னங்களையும் உடையீர் பயனற்று முதிரும் மூப்பினையும் உடையீர் கொடுமையான திறனுடன் மழுப்படையுடன் வரும் கூற்றுவன் பாசத்தால் கட்டி இழுத்துச் செல்லும் காலத்தில் நீர் உம் நிலைக்கு இரங்குவீர்- நல்வினைகள் செய்யாது விடினும் தீவினைகளாவது செய்யாது விலகுங்கள். உம்மை யாவரும் புகழ்வதற்கும் உம்மை நல்வழியிலே செலுத்தி உய்யுமாறு செய்வதற்கும் அதுவே ஏற்ற வழியாகும். இவ்வாறு நரிவெரூத் தலையார் என்னும் புலவர் எல்லோரும் உவப்பது எதுவென்பது பற்றி விளக்கிப் பாடிய பாடல் பழந்தமிழ் இலக்கியமான புறநானூறில் 195 ஆவது பாடலாக இடம்பெற்றுளளது. இப்பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது:

பல் சான்றீரே பல் சான்றீரே
கயல் முள்ளன்ன நரை முதிர் திரைகவுள்
பயனில் மூப்பின் பல்சான்றீரே
கணிச்சிக் கூர்ப்படைக் கடுந் திறல் ஒருவன்
பிணிக்கும் காலை இரங்குவீர் மாதோ!
நல்லன செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமற் றதுவே

தத்தம பெயர்களுக்கு முன்னும் பின்னும் பற்பல பட்டங்களையும், கீர்த்தியையும் குறித்துக் காட்டும் சிலர் கொழும்பில் இருந்து கொண்டும், போராட்டம் வீறுடன் நடக்கும் இவ்வேளையில் இந்தமண்ணிலிருந்து புலம் பெயர்ந்து இருந்து கொண்டும் ஆற்றும் கருமங்களை எண்ணும்போது இந்தப் பாடல் தான் நினைவுக்கு வருகிறது.

இராணுவ முற்றுகைக்குள்ளும், பொருளாதாரத் தடைகளுக்குள்ளும் கொண்ட லட்சியத்தில் குன்றிடா உறுதியுடன் நிமிர்ந்து நிற்கும் மக்களைக் கொச்சைப்படுத்தும் இவர்கள் தமது நிகழ்கால செயலுக்காக வருந்த வேண்டி வரும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே ஆகும் இவர்களை எண்ணிப் பார்க்கும் போது இவ்வாறுதான் கூறத் தோன்றுகிறது:

பட்டம் பதவிகள் பெற்றுள்ளீரே! - ஆளும்
கட்சியின் அணைப்பில் களிப்புறுவீரே!
வயதில் அறிவில் முதிர்ந்து இருப்பினும்
பயத்தில் என்றும் பணிவுறுவீரே!
காலம் வெல்லும் நாளினில் நீங்கள்
கால்களினிடையில் முகம் புதைக்க நேரும்
புலிகளைப் புகழ்ந்து பேசாவிடினும்
வலியுடை எதிரியை வாழ்த்துதல்
வேண்டாம்
இந்த மண்ணின் விருப்புடன் அதுவே
சந்ததி வாழும் வழியும் ஆகும்.

- இளையவன்

# விளையாட்டுக் களத்திற்கு ஒரு வழிகாட்டி

விளையாட்டுக்கள் இன்றைய உலகில் மனித உணர்வுகளை இணைக்கின்ற, வேறுபாடுகளைக் களைகின்ற சாதனமாகப் பயன்பட்டு வருவது கண்கூடு. விளையாட்டுக்கள் நற்பண்புகளுக்கு மெருகூட்டுவதென்பது இன்னொரு விசேட இயல்பு. நாமும் பேரினவாத தாக்குதல்களின் மத்தியிலும் சளைத்துவிடாமல் எம் மண்ணில் பல்வேறு விளையாட்டுத் துறைகளை வளர்த்தெடுத்து வருகின்றோம். இந்த வகையில் மிக முனைப்புடனும் அதிக பிரசித்தத்துடனும் எம்மால் ஆடப்பட்டு வரும் விளையாட்டு உதைபந்தாட்டமாகும். இது ஒரு பருவகால விளையாட்டு என்பது மறைந்து, வருடம் முழுவதும் ஆடப்படும் ஆட்டமாகப் பரிமளித்து வருகின்றது. இருந்தபோதும் உதைபந்தாட்டத்தின் நளினங்கள் உன்னதப் பாங்குகள் போன்றவை முற்றாகப் பேணப்படுகின்றதா என்றவினாவொன்று யாழ் மாவட்ட ஆர்வலர் மனதில் கசப்பு நிறைந்த வினாவாக எழுந்துள்ளதை மறுக்க இயலாது. இப்படியானதொரு சூழ்நிலையிற்றான் திரு. சி. மே. மாட்டின் அவர்களின் ''உதைபந்தாட்டப் பிரச்சினைகள்'' என்ற நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

பொதுவாக விளையாட்டுத் துறை தொடர்பான நூல்கள் பிரசுரமாவது இங்கு குறைவாகவே காணப்படும் இவ்வேளையில் இந்நூல் ஒரு திருப்தியை அளிக்கின்றது. உதைபந்தாட்டம் தொடர்பாக எமது மண்ணில் வெளிவரும் முதல் நூலும் முன்னோடி நூலும் இதுவே என்று எண்ணத் தோன்றுகின்றது. நூலின் தகுதி நூலாசிரியரின் தகுதியுடன் தொடர்புடையது. அவ்வகையில் தனது பதினைந்தாவது வயதில் உதைபந்தாட்டம் ஆடத் தொடங்கிய சிறுவன் ஒருவன் உதைபந்தாட்டத் துறையில் பல்வேறு எல்லைகளைக் குறிப்பிடத்தக்க வீச்சில் தொட்டுள்ளார் என்பதுடன் வேறு பல விளையாட்டுக்களையும் ஆடியவர், அறிந்தவர் அதேபோல் ஒரு நல்லாசிரியர் என்பவற்றை பின் அட்டை பளிச்செனக் காட்டி நிற்கின்றது. இம் மிக்க தகுதிவாய்ந்த ஒருவரின் உருவாக்கம் என்பதை உறுதிப்படுத்தி நம்பிக்கையுடன் உள்ளே நுழையும் ஆர்வத்தைக் கொடுக்கின்றது.

இந்நூல் 14 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள இந்நூலைப்படிக்கும் ஒருவர் தன் நேசிக்கும் விளையாட்டைப்பற்றிய பரந்ததொரு அறிவினைப்பெறும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதைப்புரிந்து கொள்வார். நூலின் தலைப்பிற்கேற்ப பிரச்சினைகள் பற்றிய விளக்கங்கள் அறிவுரைகள் கூடுதலாகக்காணப்படுகின்றஅதே வேளை (அதுவே பிரதான நோக்கத் தேவையானதுமாகும்) உதைபந்தாட்ட வரலாறு, சர்வதேச வீரர்கள், வினாவிடைப் பகுதி உலகக்கிண்ணம் பற்றிய விபரங்கள் என்று பொருத்தமாகத் தொகுத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது இந்நூலில் இவர் காட்டியுள்ள கூடுதல் அக்கறைக்குப் பிற சேர்க்கை ஒரு உதாரணமாகும் தான் பிந்தி அறிந்த விடயங்களும் ஆர்வலருக்குத் தப்பிவிடக்கூடாது என்னும் மனப்பாங்கு அவருடைய ஆக்க முயற்சியின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

---

## நிர்மலன்

---

விளையாட்டு மைதானத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு இத்துறைசார் விதிகள் பற்றிய போதிய அறிவின்மையும் அதீத உணர்ச்சிவசப்படுதலும் காரணங்களென சரியாகவே ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார் அறியாமையே கலகத்துக்குக் காரணம் உதைபந்தாட்ட விதிகள் பற்றிய பூரண அறிவுள்ளவர் எவ்வாறு நடந்து கொள்வார் என்பதை ரசிகர் - நடுவர் - வீரர் சார்பாக நின்று மிக நுணுக்கமாக ஆராய்ந்து செல்வது இந்நூலின் சிறப்பாகும். நூலாசிரியர் ஆசிரியராகவும் இருந்தமையால் மாணவருக்குச் சுவைபடப் பாடத்தை நடாத்திச் செல்வது போல் அங்கதச் சுவையும் கலந்து எழுதிச் சென்றுள்ளார், குறிப்பாக சிக்கலான விடயங்களைக் கையாண்டுள்ள முறை குறிப்பிடத்தக்கது இதில் உதாரணத்திற்கு பிழை நிலை பற்றிய பிரச்சினையைக் குறிப்பிடலாம் பிழை நிலைப் பிரச்சினை எல்லோருக்கும் மயக்கம் தருவதொன்று நூலாசிரியர் இதற்கான முக்கியத்துவத்தைக் கொடுத்து பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து வாசகருக்குத் தெளிவேற்படுத்த முனைந்துள்ளார் இந்நூலை வாசிக்கும் போது தான் பார்வையாளர்கள் எவ்வளவு தூரம் சரியான விடயங்களை அறியாமல் நடந்து கொள்கிறார்கள் என்பதை உணர முடிகின்றது

மிக அவசியமான இடங்களில் படங்கள் மூலம் விளக்க முற்பட்டுள்ளமை மிகச் சரியானதும், பொருத்தமானதுமாகும் கூடியளவு படங்கள் கூடிய விளக்கத்தைக் கொடுக்கும் என்பது உண்மையேயாயினும், அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களையும் மனதிற்கொள்ள வேண்டும் எனினும் இயன்றளவில் படங்களைச் சேர்க்க ஆசிரியர் முயன்றுள்ளார். 51-52 64 - 67 73 ஆகிய பக்கங்களில் உள்ள படங்கள் சகலருக்கும் மிகப் பயனுடையவவாகும்

தமிழ்த்தாய் வெளியீட்டகம் இலாப நோக்கம்கருதாது எம்மக்களுக்கு அவசியமானவற்றைப் பல தடைகளின்மத்தியிலும் தந்து வருபவர்கள். அவ்வகையில் இப்பத்தொன்பதாவது வெளியீடும் பெறுமதி மிக்க வெளியீடாகவே அமைந்துள்ளது எம் மண்ணின் ஒரு முதல் முயற்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்தவர்கள் என்ற பெருமையும் அவர்களைச் சாரும்

நூலாசிரியர் தம் முன்னுரையில் ''உது என்னத்துக்கு உதவும்...'' என்றவாறு முன்பொரு முறை சட்டைபண்ணப்பட்டதை மனம் நொந்து எழுதியுள்ளார். ஆனால் இன்று ''ஒவ்வொரு பாடசாலையிலும் இந்நூல் இருக்கவேண்டியதல்லவா ?'' என்ற கூற்று பலர் வாயிலாக வருவதைக் கேட்டு அவர் ஆறுதலடையலாம்

ஒரு நூலை உருவாக்குவது பிரசவ வேதனைக்குச் சமம் என்பார்கள். ஆரோக்கியமான குழந்தையொன்று பிறந்துள்ளது. அதற்குத் தேவையான ஊட்டச்சத்து ஆர்வலர் கைகளிலேயே தங்கியுள்ளது ''உதைபந்தாட்டப் பிரச்சினைகள் என்ற இந்நூல் ஒவ்வொரு பாடசாலையிலும் வீட்டிலும், கழகங்களிலும் நூலகங்களிலும்இருக்கவேண்டிய பெறுமதி மிக்க நூலாகும். இந்நூலின் தாக்கம் எம் மண்ணில் இனி நடைபெறப் போகும் உதைபந்தாட்டப் போட்டிகளில் வெளிப்பட்டுத் தெரியவேண்டும்;

---

# தமிழக அரசியலும் உவமைகளும்

தமிழக அரசியல் களத்தில் இலக்கிய நயம் ததும்பும் காட்சிகளை அரசியல் தலைவர்கள் தமது பிரசாரப் பொதுக்கூட்டங்களில் விரிவாக விபரிப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. உதாரணத்தைக் கூறி மக்களுக்கு தமது நிலையை எடுத்து விளக்குவதற்காக உப கதைகள் போல விரித்துச் சொல்லப்படும் இந்த இலக்கிய காட்சிகள் பார்வையாளர்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறதோ இல்லையோ, ரசிகர்களுக்கு சுவையானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதிலும் குறிப்பாக அடுக்கு மொழிப் பேச்சுக்களையும், ஆரவாரப் பிரசாரங்களையும் தமது மூலதனமாகக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் நடத்தத் தொடங்கியதிலிருந்து தமிழகத்தில் இத்தகைய காட்சிகள் சர்வ சாதாரணம். அண்மைய காலத்தில் தமிழக அரசியற் களத்தில் இடம் பெற்ற சில இலக்கியக் காட்சிகளை சுட்டிக் காட்டுவது இங்கு பயன் பொருத்தமானதாக இருக்கலாம்.

அண்மையில் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய தி. மு. கவின் தலைவர் மு. கருணாநிதி கீரியும், பாம்பும் பற்றி ஒரு கதையைக் கூறினார். கீரியும் பாம்பும் ஒன்றையொன்று எதிர்த்து சண்டையிட்டுக் கொண்டன. சண்டையின் முடிவில் பாம்பு செத்துப் போய் விட்டது. என்றாலும் பாம்பின் பற்கள் பதிந்தமையால் கீரியின் உடலில் விஷம் ஏறிக் கொண்டு விட்டது. தன் உடலில் ஏறியிருக்கின்ற விஷத்தை நீக்குவதற்காக கீரி பச்சிலைகளை தேடித் தேடி புரளும். அதுபோல என் மீது விஷம் தோய்ந்த பழிச்சொல்லை வீசியிருக்கின்றார்கள். அந்த விஷத்தை முறிக்கின்ற பச்சிலையாகிய தொண்டர்களாகிய உங்கள் முன்பு வந்து நிற்கின்றேன் நான் என்றார்.

கருணாநிதியின் இந்த இலக்கிய உதாரணத்திற்கு வை. கோபால்சாமி குன்றத்தூர் பொதுக் கூட்டத்தில் பேசும் போது பதிலளித்தார். அவர் அங்கு பேசும்போது, பாம்பும் கீரியும் பற்றி சிலப்பதிகாரத்திலே ஒருகதை வருகிறது. குழந்தையை சீராட்டி பாலூட்டி தூளியிலே போட்டு தூங்க வைத்துவிட்டு தண்ணீரெடுக்க போனாள் ஒருதாய். குழந்தை தூங்கிக் கொண்டு இருக்கிறது. அந்தத் தாய் ஆசையோடு வளர்க்கின்ற கீரிப்பிள்ளை வீட்டுக்குள் வளைய வளைய வந்து கொண்டிருக்கிறது. தொட்டிலிலே தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் பக்கத்தில் நாகம் சீறுவதைப் பார்த்து கீரி பாய்ந்தது. நாகத்தோடு சண்டையிட்டது. நாகபாம்பைக் கொன்றது. நாகபாம்பையே கொன்று குழந்தையைக் காப்பாற்றி விட்ட மகிழ்ச்சியுடன் கீரிப்பிள்ளை வாயெல்லாம் ரத்தத்தோடு வாசலுக்கு வந்தது. தலையிலும் இடுப்பிலும் தண்ணீர்க்குடம் சுமந்துவந்த அந்தத் தாய் வாயிலே ரத்தத்தோடு நின்ற கீரிப்பிள்ளையைக் கண்டாள். பத்துமாதம் சுமந்து பெற்ற அந்த தாயின் மனம் துடித்துப் போனது. குழந்தையைக் கீரி கடித்துத் தின்று விட்டது. கொன்று விட்டது என்றே கற்பனை பண்ணியது. கீரிப்பிள்ளையின் தலையில் தண்ணீர்க் குடத்தால் அடித்தாள். கீரி செத்துப் போயிற்று. பதறி ஓடினாள். தொட்டிலில் கிடந்த குழந்தையை நோக்கி. சத்தத்தில் விழித்துக் கொண்ட குழந்தை தன் பொக்கை வாயைக் காட்டி சிரித்துக் கொண்டிருந்தது. உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் எந்தக் குற்றமும் செய்யாத என்னை இயக்கத்திலிருந்து வெளியேற்ற தொடர்ந்து மூன்றாண்டு காலமாக முனைந்து ஒன்றும் நடக்காமல் போக கடைசியில் கொலைத் திட்டத்திற்கு உடந்தையாகி விட்ட சதிகாரன் என்ற பழியைச் சுமத்தி அழிக்க நினைத்தபோது, அந்தத் தாய் அவசரப்பட்டதைப் போல தி. மு. க. தொண்டர்களும் அவசரப்பட்டிருந்தால் கீரிப்பிள்ளை செத்துப் போனதைப் போல இந்த வை. கோவும் என்றைக்கோ முடிந்து போயிருப்பான். கதையும்முடிந்து போயிருக்கும் எனவும் தெரிவித்தார்.

இதன் பின்னர் சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடி நகரில் பேசிய கருணாநிதி, அரிச்சந்திரன் நாடகத்தில் லோகிதாசன் பாம்பு கடித்து செத்து விழும்போது அதைப் பார்த்து ரசிக்கும் தமிழக மக்கள் ஒன்ஸ்மோர் என்பார்கள் மீண்டும் இறந்தவன் எழுந்து பேசுவான். பிறகு பாம்பு கடித்ததும் இறந்து விழுவான். இதைப் பார்த்து கண்ணீர் வடிப்பார்கள். அந்த நாடக பாம்பு ரப்பர் பாம்பு என நினைக்க மாட்டார்கள் என்றார்.


## A/L 96

விஞ்ஞானப் பிரிவு

23 - 4 - 94 முதல்

| | |
|---|---|
| பௌதிகவியல்:- | திரு வர்ணம் |
| இரசாயனவியல்: | திரு. செல்வா |
| தாவரவியல்: | திரு ஐங்கரநேசன் |
| விலங்கியல்:- | திரு. கெங்காதரன் |
| தூய / பிரயோக கணிதம்:- | திரு. கிருஷ்ணா |

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

❋ அனுமதிகள் யாவும் வெள்ளி [22.4.94] பி.ப 4 மணிக்கு வழங்கப்படும்.

[இ - 9212]



## யாழ் வணிகர் கழகம்

(யாழ் வர்த்தகர் சங்கம்)

## விசேட பொதுக்கூட்டம்

இன்று 22-04-94 வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எமது கழக வணிகப் பெருமக்கள் அனைவருக்கும் ஓர் விசேட பொதுக்கூட்டம் நடைபெறும்

மேற்படி கூட்டத்தில் அரசியல் துறையினர், நிதித் துறையினர் கலந்து கொள்வார்கள்.

எமது கழக வணிகப் பெருமக்களின் வாணிபம் சம்பந்தமான பல பிரச்சினைகள் ஆராயப்பட இருப்பதால் இக் கூட்டத்தில் முக்கியத்துவம் உணர்ந்து தாங்கள் நேரடியாக குறித்த நேரத்தில் சமுகம் கொடுத்து தங்கள் கருத்துக்களையும் தெரிவிப்பதுடன் அவர்களின் அறிவுரை, ஆலோசனைகளையும் பெற்று பயனடையுமாறு சங்கத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்

யாழ் வணிகர் கழகம்

(சி-9219)

உ




## சண்டிலிப்பாய், சீரணி

### அருள்மிகு சிறீ நாகபூஷணி அம்பாள் ஆலய

# விநாயகர் புதிய சித்திரத்தேர்

# வெள்ளோட்ட விழா மலர்

## 22 - 04 - 1994



## வினைவேரறுக்கும் விநாயகப் பெருமான் எழுந்தருளி வரும் புதிய சித்திரத்தேர்

''சக்திதான் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்'' என்பது சமயநூல் விளக்கம், சகல அண்டங்களையும் ஆக்கி அழிக்கும் மகாசக்தியாக, சண்டிலிப்பாய் சீரணி அருள் மிகு ஸ்ரீ நாக பூஷணி அம்பாள்; அடியார்களின் தொல்வினைகளைத் தொலைத்து திருவருள் பாலித்தருளுகின்றார். இவ்வாலயம் மருத நிலப் பண்பினைக் கொண்ட இயற்கையான சூழலில் அமைதி நிலவ அழ்காக அமைந்துள்ளது, எம் நாக பூஷணி அம்பாளுக்கு வீதி வலம் பவனி வர ஏற்கனவே ஓர் திருத்தேர் அமைக்கப்பட்டுள்ளது.

தனக்கு மேலாக ஒரு நாயகம் இல்லாத மூலப் பிரணவ ரூபியான விநாயகப் பெருமானுக்கு ஒரு புதிய சித்திரத்தேர் அமைக்க வேண்டும் என ஆலயத் தர்மகர்த்தாசபை தீர்மானித்துச் செயற்படுத்தியுள்ளது.

### தேரின் தத்துவம்

சுவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பட்டதேரானது, அழித்தலைக் குறிக்கின்றது. தேர்கள் பெரும்பாலும் தாமரைப் பூ வடிவாகவே அமைக்கப்பட்டன என்பதை 'கோட்டிற் செய்த கொடிச்சிநெடுந் தேர்'
(பொருநராற்றுப்படை)
என்பதால் அறியக்கிடக்கின்றது. தேரின் மேற்பாகம், பிரபஞ்சத் தோற்றத்தையும், அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. தத்துவப்படி உடல் அமைப்புத்தான் தேராகும். அதில் வீற்றிருக்கும் இறைவனே ஆன்மாவாகும்.

புத்திதான் சாரதி, மனம் கடிவாளம், இந்திரியங்கள் குதிரைகள் விடயங்களே தேர் செல்லும் இடம், தேர் சரியான பாதையால் செல்வதற்காக, சறுக்குக்கட்டைக்காரன் கட்டையைப் போட்டு நெறிப்படுத்துவான். அவனே விதி, நமது வாழ்க்கையையும் நல்வழிகளில் நெறிப்படுத்தவேண்டும், மேலே கோபுரம் போலக் குவிந்து செல்லும் தேர்க்கலச முடிவில் குடை நிழல் தெரிகிறது, மனம் குவிந்து மேலான அருட் சிந்தையுடன், இறைவனைத் தியானித்தால் அருளாகிய குடை நிழல் நம்மைத் துன்ப வெளியில்இருந்து பாதுகாக்கும்,

### விநாயகர் வடிவம்

சக்தி வழிபாட்டுக்கு அடுத்த படியாக விநாயகர் வழிபாடு பரவி வருகிறது, கணேசர் உருவத்தில், யானைத்தலையும், நான்கு கரங்களும் அவற்றில் உள்ள பாசம் அங்குசம், ஒடித்த கொம்பு, தும்பிக்கையில் மோதகம் உள்ளன, விநாயகருக்குத் தும்பிக்கையுடன் ஐந்து கைகள் இருக்கின்றன, உயர்த்திய இரு கைகளிலும் அங்குசம் பாசம் என்னும் ஆயுதங்கள் உள்ளன, யானைமுகன் ஆன்மாக்களை நல்வழியில் நடாத்தி வருகிறார் என்பது பொருள் இருகைகளிலும் இருக்கும் அட்சமாலையும், ஒடிந்த ஒற்றைக் கொம்பும் இது கல்வி பயில வேண்டும் என்பதையும் சிந்தனா சக்தியைச் செபம் மூலம் வளர்க்க வேண்டும் என்பதையும் குறிக்கின்றது. ஐந்தாவது கையாகிய தும்பிக்கையில் தனக்கு விருப்பமான மோதகம் வைத்திருக்கிறார், நல்லுணவை நாம் உண்ண வேண்டும் என்பதை இது விளக்குகின்றது. விநாயகருக்கு முக்கண்கள் உள்ளன. இருகண்களும் புற உலகைக் காண்பதற்கு அமைந்தன, நெற்றிக்கண் பரஞானத்தைக் காட்டுகின்றது,

**நா கணபதிப்பிள்ளை**
தலைவர்
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தான
தர்மகர்த்தாசபை

மலர் வெளியீடு:
**தேவஸ்தான தர்மகர்த்தா சபை**
மலரமைப்பு:
**தம்பிராசா பரமலிங்கம்**

## விக்கினங்கள் வராது காப்பவர் விநாயகர்

புராதன வரலாற்றுப் புகழ்மிக்க ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில், பிரணவ சொரூபியாம் விநாயகப் பெருமானுக்கு சித்திரத் தேர் அமைத்து வெள்ளோட்டவிழா நிகழ விருப்பதறிந்து பெரிதும் மகிழ்வுறுகிறோம். எக் காரியங்களுக்கும்முதலில் அவரையே வழிபடுகிறோம். மிக எளிய வகையில் வழிபடப்படுபவரும் அவரே. அவரைக் குறிக்க ஒரு கோமய உருண்டை அல்லது மஞ்சள் உருண்டை போதும். இவ்விழா சிறப்புற நிறைவுற விநாயகப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்**

## பக்திமேம்படச் செய்யும் பணி

அற்புதமும். பழமையும் வாய்ந்த இவ்வாலயத்திலே இவ்வாண்டு விநாயகப் பெருமானுக்கு புதிய சித்திரத் தேர் ஒன்று உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெற இருப்பது உள்ளத்தை குளிர்விக்கிறது. திருப்பணிகளால் அழகொழுகச் செய்து பக்தி உணர்வை மேம்படச் செய்கிறார்கள்,

''உனக்குப் பணி செய்ய உன்றனை எந்நாளும்
நினைக்க வரமெனக்குத் தா''

என்று பாடினார்கள் அருளாளர்கள். எனவே சிந்தையிலும் செயலிலும் திருவருள் நினைப்புத் தோன்ற வாழ்வாங்கு வாழ்ந்து பணிபுரியும் அனைவரையும் பாராட்டி அம்பிகையின் திருவருளையும் ஆனைமுகன் அற்புதத்தையும் போற்றி அமைகின்றேன்

**தங்கம்மா அப்பாக்குட்டி**

## முதன்முதற் கடவுள்

சண்டிலிப்பாய் சீரணிப் பதியில் கொலுவீற்றிருந்து அருள் மழையை அள்ளிப் பொழியும் அன்னை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில், முதன் முதல் கடவுள் எம் பெருமான் விக்கினங்களை அழித்து இஷ்டசித்திகளை எமக்கருளும் விநாயகப் பெருமானுக்கு நல்லதொரு சித்திரத்தேர் அமைக்க திருவுளம் பாலித்தது இந்துசமய பக்தர்களுக்கெல்லாம் நல்ல ஒரு செய்தியாகும்.

அடியார்களின் நல்ல இருதய சுத்தியான உதவியினால் இந்த நல்ல காரியம் நிறைவேறியுள்ளது, இந்த ஆலயத்துக்கு செய்யவேண்டிய திருப்பணிகள் ஏராளம் உண்டு, இந்த அடியார்களின் ஒத்துழைப்பு நிறையவே இருக்குமென்று எதிர்பார்க்கின்றோம்,

**து. வைத்திலிங்கம்**
பிரதேச செயலர்,
சண்டிலிப்பாய்,

## கும்பிட்டெந்நேரமும் சக்தியென்போம்

ஈழத்தில் தலைசிறந்த அன்னையினாலயங்களிலே சீரணி நாகபூஷணி அம்மனாலயமும் குறிப்பிடத்தக்கதொன்று, பல்லாயிரக்கணக்கான மக்கள் தனமும், கல்வியும் தளர்வறியா மனமும் வஞ்சமில்லா இனமும் அன்னை தருவாளென்று அவளிடம் கையேந்தி நிற்பது ஆண்டுதோறும் நாம் காணும் அருமையான காட்சி. ஐங்கரனுக்காகப் புதுத்தேர் பொலிவுற்று நிற்கிறது. அன்னையும் மைந்தனும் இரதமேறி நம் வினையகற்ற வரும் காட்சியைக்காண நாம் தவம் செய்திருக்க வேண்டும்,

**இ ஜெயராஜ்**
அமைப்பாளர்,
அகில இலங்கைக் கம்பன் கழகம்,


புதிய சித்திரத் தேரோடி
புவனம் சிறக்க வேண்டும்

துர்க்கா மில்
கட்டுடை,
மானிப்பாய்.

றன்சன்ஸ் கூட்வெயர் ஸ்ரோர்ஸ்
மருதடி விநாயகர் கோவிலடி,
மானிப்பாய்.

நாகபூஷணி அரிசி மில்
சீரணி,
சண்டிலிப்பாய்

இலக்ஷமி ஸ்ரோர்ஸ்
சங்கானை

லீலா பேக் ஹவுஸ்
சீரணி,
சண்டிலிப்பாய்

அம்மான் அரிசி ஆலை
சீரணி,
சண்டிலிப்பாய்

செல்லத்துரை குடும்பம்
ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்

விக்கினம் தீர்க்க
புதிய சித்திரத்தேர்
வெள்ளோட்டம்
வரும்
விநாயகா போற்றி

சுஷ்ரா கல்வி நிலையம்
சித்தன்கேணிச் சந்தி,
சித்தன்கேணி

பாக்கியரெட்ணம்
காட்வெயர் ஸ்ரோர்ஸ்
சங்கானை

சுந்தர்சன்
மத்திய சந்தை,
மானிப்பாய்

ந. காசிப்பிள்ளை
அன்சன்ஸ்
சங்கானை

சிறி அமலா
நகை மாளிகை
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

துர்க்கா
நகைத் தொழிலகம்
ஸ்ரேசன் றோட்,
மல்லாகம்

சீரணி
இந்து இளைஞர் மன்றம்
சண்டிலிப்பாய்


(சி-9221)

# ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா - தொண்டமான்

# சமரசத்தின் அடிப்படை என்ன?

அரசியலில் கூட்டல் கழித்தல் செய்வதென்பது எப்பொழுதும் கடினமானதே. அதிலும் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள அரசியல் வாதிகளின் நிலைப்பாடுகளின் அடிப்படையில் அதனை மேற்கொள்வது மிகமிகக் கடினமாகும், இந்த வகையில் இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான தொண்டமானை வைத்து கூட்டல் கழித்தல் செய்வது மிகவும் ஆபத்தாகக் கூட முடிந்து விடக் கூடும். கடந்த காலத்தில் அவரை வைத்துப் போடப்பட்ட அரசியற் கணக்குகள் பல தப்பாகவே முடிந்துள்ளமை வரலாற்று உண்மை,

இதற்கு 1952 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நாடுதழுவிய ஹர்த்தாலில் தொண்டமான் ஒரே இரவில் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமை சிறப்பான உதாரணமாகும்.

இந்த வகையிலேயே ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அமைச்சர் தொண்டமான் மீண்டும் உறவு கொள்ள முடிவு செய்துவிட்டமையை நோக்க வேண்டும். ஆனால் அமைச்சர் தொண்டமானின் இம்முடிவானது அரசியற் கணக்குகளை தவறாக்கலாம் ஆனால் எவருக்கும் ஆச்சரியம் அளிக்கும் ஒன்றாக மட்டும் இருக்கப் போவதில்லை.

ஐ.தே.கட்சியுடன் அமைச்சர் தொண்டமானுக்கு ஏற்பட்ட முரண்பாடு என்பது குறிப்பாக அதன் தலைவரும் ஜனாதிபதியுமான டி.பி. விஜேதுங்காவுடன் ஏற்பட்ட முரண்பாடு என்று கொள்ளப்பட வேண்டும். இதைத் தவிர ஐ தே. கட்சியுடன் ஏற்பட்ட கொள்கை முரண்பாடு என்று கொள்ளப்படக் கூடியதொன்றல்ல. ஏனெனில் ஐ.தே கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அதன் கொள்கையில் பெரியதொரு மாற்றம் எதுவும் நிகழவில்லை. அக்கட்சி அன்று தொடக்கம் இன்று வரை ஒரு பேரினவாதக் கட்சியாகவே தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

ஆனால் கட்சியின் தலைமைத்துவம் மாற்றம் அடையும் போது அவர்களின் தனிப்பட்ட ஆளுமை, சிந்தனைகள் என்பனவற்றிற்கு ஏற்ப செயற்பாடுகள்,அணுகுமுறைகள் மாற்றம் காண்கின்றன. இந்த வகையிலேயே டி.பி. விஜேதுங்கா ஜனாதிபதியாகவும், ஐ.தே.கவின் தலைவராகவும் பதவி ஏற்றதும் ஐ தே. க வின் அணுகுமுறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன என்பதே உண்மை,

இந்த நிலையிலேயே அமைச்சர் தொண்டமானுடன் டி,பி,விஜேதுங்கா முரண்பட வேண்டி வந்தது, முன்னாள் ஜனாதிபதிகளும்,ஐ,தே,கதலைவர்களுமான ஜே,ஆர், ஜெயவர்த்தனா, ஆர், பிரேமதாசா போன்றவர்கள் தொண்டமானுக்கு அரசியலில் வழங்கிய முக்கியத்துவத்தை வழங்காமல் அரசியலை நடத்திச் செல்ல முடியும் என டி,பி, விஜேதுங்கா கருதியமையும்,அதன் அடிப்படையில்தொண்டமானை புறக்கணிக்க முற்பட்டமையுமே இருவருக்கும் இடையிலான முரண்பாட்டிற்குக் காரணமாகும்.

டி,பி, விஜேதுங்கா இவ்வாறானதொரு முடிவிற்கு வருவதற்கு அவர் தனதுஅரசியற்தளத்தைமலையகத்தில் கொண்டிருந்தமையும், அத்தளத்தை அப்பகுதியிலேயே மேலும் விரிவாக்க முற்பட்டமையுமே காரணமாகும்: இம் முடிவானது தனது அரசியற் தளத்தை ஆட்டம் காண வைக்கும் முயற்சியாகவும்' மலையகத்தில் தலைவர் என்ற தனது நிலையை அழித்து விடும் முயற்சி என்றே தொண்டமானினால் கருதப்பட்டது தொண்டமானின் இக் கருத்தானது தவறானது என்று கொள்வதற்கும் இல்லை.

அமைச்சர் தொண்டமானின் கடந்த கால அரசியற் வரலாற்றைப் பார்த்தால் அவர் மலையக தமிழ் மக்களின் உரிமைகளில் அக்கறை காட்டியதை விட தமது தலைமைத்துவத்தை பாதுகாப்பதிலும் இ.தொ.கா. வை தனது பிடியில் வைத்திருப்பதிலும் எப்பொழுதும் குறியாக இருந்து வந்துள்ளமை தெரியும்.

தொழிற்சங்கமாக இருந்து அரசியற்கட்சியாக உருப்பெற்ற இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் கட்சியானது பெயரளவில்தான் ஜனநாயக ரீதியிலானது- ஆனால் அங்கு தொண்டமான் வைத்ததே சட்டமாக இருந்தது அவர்எப்பொழுதும் கட்சியில் சர்வாதிகாரியாகவே இருந்தார் அதிகாரத்தை முழுமையாகத் தனது கைகளில்வைத்திருந்தார்பொதுச்சபைநிர்வாக குழு என்பவை எல்லாம் தொண்டமான் கூறுவதை நிறைவேற்றும் அவரதுகைப்பாவைகளாகக்கொண்டவையாகவேஇருந்தன.சுமார் 27 வருடங்களாகஅக்கட்சியின் பொதுச்செயலாளராக இருந்து வரும் அமைச்சர் செல்லச்சாமியும் அவ்வாறு இருந்து கொண்டமையினால் தான் அவரால் இவ்வளவுநீண்ட காலத்திற்குஅப்பதவியில் நீடிக்க முடிந்தது-

இ தொ.கா விற்குள் தொண்டமான் கடைப்பிடித்த கொள்கை போன்றே இ.தொ.கா.வெளியாருடன் குறிப்பாக ஏனைய அரசியற் கட்சிகளுடன் வைத்துக்கொண்டார் இ தொ கா ஏனையவர்களுடன் அவர் விரும்பிய நேரத்தில் நட்புக்கொள்ளவும் விரும்பிய நேரத்தில் முறித்துக் கொள்ளவும் கூடியதாக இருந்தது அதேபோன்றே தொண்டமான் விரும்பியதே இ தொ காவின் கொள்கையாக இருந்தது கட்சிக்கென கொள்கை எதுவும் இருக்கவில்லை

எடுத்துக்காட்டாக, 1964 ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை வன்மையாக எதிர்த்த தொண்டமான், 1967 ஆம் ஆண்டில், இவ் ஒப்பந்தம் அமுலாக்குவது தொடர்பாக ஐ தே. க. கொண்டு வந்த சட்டத்திற்கு ஆதரவளித்து வாக்களித்தார். இதே போன்றே அண்மையில் ஐ. தே. கவுடனான உறவை முறித்துக் கொள்ளப் போவதாகப் பேசி வந்த தொண்டமான் மீண்டும் ஐ. தே. க. வுடன் உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டு டி. பி. விஜேதுங்காவுடன் கட்டி அணைத்துக் கொண்டார்.

அதாவது அமைச்சர் தொண்டமான் எப்பொழுதும், தனது தலைமைத்துவத்தைக் 'காக்க கூடிய வகையில், ஐ. தே. க. செயற்படும் வரையில் அதற்கு ஆதரவாகச் செயற்பட்டார். ஆனால், ஐ. தே. க. அதற்கு விரோதமாகச் செயற்படத் துணிந்த போது அவர் மோதலுக்குத் தயாரானார்.

டி. பி. விஜேதுங்கா பதவி ஏற்றதில் இருந்தே இருவருக்குமான முரண்பாடுகள் தீவிரமாகின. ஒப்பீட்டு ரீதியில் ஏனைய ஜனாதிபதிகளை விட இனவாதப் போக்கை வெளிப்படையாகக் காட்டிய டி. பி., தொண்டமானை வெளிப்படையாகவே புறக்கணிக்க முற்பட்டார். இதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாக தொண்டமான் மத்திய மாகாண சபையில் ஐ. தே. க வின் ஆட்சியை எதிர்க்கட்சியுடன் சேர்ந்து கவிழ்க்கும் முயற்சியில் இறங்கினார். இதற்காகத் தனது கடந்த கால அரசியல் குரோதத்தை மறந்து காமினி திசாநாயக்காவை முதன் மந்திரியாக்கும் முயற்சிக்கு வெளிப்படையாக ஆதரவும் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையில் உள்ள "இ. தொ. கா. உறுப்பினர்களும் எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு அளிக்குமாறும் கேட்டுக் கொண்டார். ஆனால் இதுவரை காலமும் இ. தொ. கா விற்குள் இருந்த கட்டுக்கோப்பு இதில் உடைந்து போனது. தொண்டமானுக்கு எதிராக இ.தொ, கா வின் செயலாளர் தலைமையில் ஒரு குழுவினர் ஐ. தே. க வுடனான உறவை முறித்துக் கொள்ள தயாராக இருக்கவில்லை. மத்திய மாகாண சபையில் இருந்த 11 உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கூட தொண்டமானை ஆதரிக்க தயாராக இருக்கவில்லை.

தொண்டமானின் எதிர்குழுவிற்குஅமைச்சர்செல்லச்சாமிதலைமை தாங்கினார். இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. தொண்டமான் தனது பேரனை இ, தொ. கா வின் அடுத்த வாரிசாகக் கொண்டு வர முற்பட்டமையும், தற்பொழுது அனுபவித்து ரும் சலுகைகளை விட்டுக்கொடுக்க தயாராக இல்லாமையும் முக்கியமானதாகக்கருதப்படுகின்றது இவற்றில், எதுவாக இருப்பினும் ஐ. தே. க இம் முரண்பாட்டைப் பயன்படுத்தி இ. தொ. கா வை உடைக்கும் முயற்சிகளில் இறங்கியது.

இதே சமயம், தனது அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்படாத மாகாண சபை உறுப்பினர்கள் மீதும் அதற்கு தலைமை தாங்கிய செயலாளர் செல்லச்சாமி மீதும் ஹட்டனில் கூடிய தொண்டமான் தலைமையிலான இ. தொ. கா: பொதுச்சபை மற்றும் நிர்வாகக் குழு கூட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கட்சியில் இருந்து செல்லச்சாமிஉட்பட மாகாணசபை உறுப்பினர்கள் எட்டுப் பேரையும் விலக்குவதற்கும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன

ஆனால் ஐ. தே கவிற்கும் செல்லச்சாமி மற்றும் எட்டு மாகாணசபை உறுப்பினர்களுக்கும் இடையில் இருந்த நல்லுறவும் அவர்களின் தேவையும் இ. தொ. காவின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு தடையாக எழுந்தது. இதேசமயம் செல்லச்சாமி மற்றும் எட்டுப்பேருக்கும் வலுச்சேர்க்கும் விடயங்களிலும் ஐ தே க இறங்கியது. மலையகத்தில் ஐ தே க இவர்களுக்கெனப் பல கூட்டங்களையும் ஏற்பாடு செய்தது

ஆனால் தொண்டமான் மலையகத்தில்மக்கள்மத்தியில் இறங்கிவேலை செய்யத் தொடங்கினார் செல்லச்சாமியையும் ஏனைய எட்டு மாகாண சபை உறுப்பினர்களையும் பதவிகளுக்காக இனத்தைக் காட்டிக் கொடுத்த துரோகிகள் எனக் குற்றம் சாட்டினார், மலையக மக்களின் உரிமையை டி பி விஜேதுங்கா அரசாங்கம் இனவாத நோக்கில் மறுப்பதாகப் பிரசாரம் செய்தார். இந்நிலையில் தொண்டமான் மக்கள் ஆதரவைத் தனது பக்கம் திருப்பிக் கொண்டார்

இந்நிலையில்தான் தொண்டமான் தனது அரசியல் விரோதியாகக்கருதிய மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் விடுதலை செய்யப்பட்டார். செல்லச்சாமியின் தீவிரமுயற்சியின் அடிப்படையிலேயே சந்திரசேகரனுக்கு விடுதலை வழங்கப்பட்டதாகத் தகவல் தெளிவுபடுகின்றன. செல்லச்சாமிஇதுதொடர்பாக மூன்று முறை சந்திரசேகரனைச் சந்திக்க சிறைச்சாலைக்கும், நான்கு தடவை பாதுகாப்பு அமைச்சிற்கும் சென்று வந்ததன் விளைவே விடுதலையாகும்

இவ்விடுதலைக்கு செல்லச்சாமி காட்டிய கரிசனையானது மலையகத்தில் தொண்டமானுக்கு எதிரான ஒரு பலமான அணியை உருவாக்கும் நோக்கம் கொண்டதாகும். ஆனால் தனியாக இது செல்லச்சாமியின் திட்டம் என்பதை விட ஐ தே கவின் ஆசியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டம் என்று கூறினும் தவறில்லை

ஏனெனில், ஏற்கனவே நீதிமன்றம் அனுமதி வழங்கியும் சந்திரசேகரனை விடுதலை செய்ய மறுத்த பாதுகாப்பு அமைச்சு பின்னர் சந்திரசேகரனை விடுதலை செய்ததில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ளமுடியும் சந்திரசேகரன் விடுதலைசரியானதா பிழையானதா என்பதைவிட அதில் அரசியல் பின்னணி இருந்ததென்பது மட்டும்உண்மை. இதனை "எனக்கு பிணைவழங்கப்படுவதற்கு எவருக்காவது அரசியல் உள்நோக்கம் இருந்ததா என்பதில் நாம் அக்கறை கொண்டிருக்கவில்லை கைது செய்யப்பட்டதில் இருந்து 33 மாதமாக பிணை வழங்கப்படவேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கின்றோம். ஆனால் தேசிய அரசியலிலும், மலையக அரசியலிலும் பல திருப்பங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இவ்விடுதலை அமைந்துள்ள போதும் மலையக மக்கள் முன்னணி தனது அரசியல் நிலைப்பாட்டின் போக்கை திசைமாற்றுகின்றதோ என்ற கருத்தை நாம் உறுதியாக மறுக்கின்றோம்'' என்ற சந்திரசேகரனின் பேச்சில் இருந்தே ஓரளவு புரிந்துகொள்ளமுடியும்

ஆயினும் தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் டி.பி, விஜேதுங்காவின் அரசியல் நிலைப்பாட்டைப் பல வீனமாக்கியது இத்தேர்தல் முடிவுகள் டி ,பி விஜேதுங்காவின் பத்து மாத கால ஆட்சிக்கு கிடைத்த தோல்வி என்றே கொள்ளப்பட்டது: அத்தோடு மலையகம் தொடர்பாகவும், அங்குள்ள தொண்டமானின் அரசியற் பலம் குறித்த புலனாய்வு அறிக்கைகளும் டி-பி, விஜேதுங்காவிற்கு தமது கொள்கையில் சில மாறுதல்கள் அவசியம் என்பதை உணர்த்தியது, அவ்வாறு மாற்றம் மேற்கொள்ளப்படாதவிடத்து அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான ஐ,தே,க வேட்பாளராக நிற்க முடியுமா என்ற கேள்வியையும் உருவாக்கியது, இதற்கு ஏற்றால் போல் டி.பிக்கு எதிராக ஐ,தே.கவிற்குள் பலமான எதிரணிகளும் உருவாகும் சூழ்நிலையும் தோற்றம் பெற்றது:

இதன் வெளிப்பாடு தேர்தல் முடிந்து ஒரு வாரகாலத்திற்குள் தெரிய வந்தது கல்வி அமைச்சரான அநுரா பண்டார நாயக்கா, அமைச்சர் தொண்டமானுடன் சமரச முயற்சிகள் குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார், அப் பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றமும் காணப்பட்டதாகவும் அறிவித்தார் இதே சமயம் அநுரா பண்டார நாயக்காவின் இம் முயற்சியானது அவரது தனிப்பட்ட முயற்சியா ? அல்லது டி,பி, விஜேதுங்காவினது அங்கீகாரத்தினுடையதா என்பது குறித்து ஊர்ஜிதமான தகவல் வெளியாகவில்லை ஆயினும், விஜேதுங்கா பச்சைக் கொடி காட்டாமல் இவ்வாறானதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்க முடியாது என்பதே அரசியல் விமர்சர்களது கருத்தாகும். அதே சமயம் இப்பேச்சுக்களின் பின்னணியில் ஜே, ஆர். ஜெயவர்த்தனாவின் கை இருந்ததாகவும் கருதப்பட்டது

ஆனால் அமைச்சர் தொண்டமானுக்கும் ஐ-தே-க-விற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டைத்தீர்த்து வைத்ததில் பெரும்பங்கு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவினது என்றே கருதப்படுகின்றது ஏற்கனவே தொண்டமானுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்த ஜே ஆர். ஜெயவர்த்தனா, தொண்டமானுக்கும் - ஐ. தே. கவிற்கும் உள்ள முரண்பாடு எந்தளவிற்கு ஐ தே. காவைப் பாதிக்கும் என்பதை உணர்ந்திருந்தார்- இந்நிலையிலேயே அரசியலில் ஒதுங்குவதாக அறிவித்திருந்த பின்னரும் ஐ தே க-வில் இன்னும் பலம் பொருந்திய சக்தியாக இருக்கும் ஜே- ஆர், சமரசமுயற்சிகளில் ஈடுபட்டார்.

இச் சந்திப்பில் முக்கியமான பிரச்சினையாக எவை எவை பேசப்பட்டன என்பது வெளிவராது விட்டாலும், அநுரா பண்டார நாயக்காவுடன் பேச்சு நடத்திய போது தொண்டமான் முன்வைத்த நிபந்

ஜெயராஜ்

தனைகள் நிறைவேற்ற ஐ தே. க. உறுதியளித்திருக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை இதேசமயம் மலையக மக்களின் பிரச்சினைகள் எவை பற்றியும் பேசப்படவில்லை என்பதும் உண்மையாகும் ஏனெனில் அவைபற்றிப் பேசியிருப்பின்அவைபின்னர் தொண்டமானால் அரசியல்லாபம்கருதி அவை பிரபலப் படுத்தப்பட்டிருக்கும்:

இதே சமயம்,தொண்டமான்அநுராவுடனோ அன்றி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுடனோ நடத்திய பேச்சுக்களின் போது அமைச்சர் செல்லச்சாமி தொடர்பாகவும்அவருடன்கூடிய எட்டு மாகாணசபை உறுப்பினர்கள் தொடர்பாகவுமே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கும் என்பதே அரசியல் அவதானிகள் கருத்தாகும்- இப்பேச்சுக்களின் பின்னர் அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதியைச் சந்திக்க சம்மதித்தமையானது அப்பேச்சுக்களின் போதே பேரங்கள் முடிந்து விட்டன என்பதைக் காட்டுவதாகவே கொள்ள முடியும்:

இதன் பிரகாரம் அமைச்சர் செல்லச்சாமியினதும் அவருடன் கூடிய எட்டு மாகாணசபை உறுப்பினர்களினதும் அரசியல் எதிர்காலம்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சா[illegible]ன் விளிம்பில்

கவலைஏற்பட்டுள்ளதாகதெரிகின்றது. அமெரிக்காசோமாலியாவுக்கு படைகளை அனுப்புமாறு கோரிய போது உடனடியாகபடையனுப்பிய பாகிஸ்தானும் சற்றுத்தயங்கி பின் படையனுப்பிய இந்தியாவும் இப்போது தலையை தொங்கப் போட்டவண்ணமேயுள்ளார்கள், அமெரிக்க படையணியின் அத்துமீறிய நடவடிக்கைகள் தங்களையும் பாதிப்பதாக இவர்கள் இப்போது குறைப்பட்டுக் கொள்கின்றார்கள்.

எது எப்படி இருந்தபோதும் விரைவில் தாயகம் திரும்பவிருக்கும் அய்டீட் என்ன செய்வார் என்பது பொறுத்துப் பார்க்க வேண்டிய விடயமே அவர் முன்னர் தங்கியிருந்து அமெரிக்கப் படையால் தகர்க்கப்பட்ட அவருடைய குடியிருப்புப்பகுதி இப்போது பொலிவுடன் தோற்றம் கொடுக்கும் வகையில் சீரமைக்கப்படுகின்றது. அவருக்கு பெரும் வரவேற்பினைக் கொடுக்க அவரது சோமாலிய தேசியக் கூட்டணி ஆயத்தமாகின்றது. தம் கண்முன்னே இத்தகைய நிகழ்வுகள் நடப்பதை அமெரிக்கப் படையினர் பெரும் மனஉலைச்சலோடு பார்க்க நேரிட்டு விட்டது. எனினும் யதார்த்தத்தை அவர்களாலும் புறக்கணிக்க முடியவில்லை. முன்னர் சோமாலியாவில் கைதாகி விடுவிக்கப்பட்ட அமெரிக்க விமானி ஒருவர் ''நீங்கள் சோமாலியராக இல்லாவிட்டால் அங்கு என்ன நடக்கின்றது என்பதை அறிய முடியாது'' என்றார்.

இப்போது வெளியேறும் போது அமெரிக்க படைவீரர் ஒருவர் பின்வருமாறு கூறினார். "நாங்கள் சோமாலிய மக்கட்கு உதவுவது என்கிற நிலையிலும் அம்மக்களின் தலைவிதியை நாமே தீர்மானித்தல் என்கிற நிலையிலும் வழிதவறி எல்லை மீறிவிட்டோம். இப்போது நாங்கள் வெளியேறுகிறோம். அவர்கள் தங்கள் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கட்டும்'' என்றார். இப்பட்டறிவு இன்றைய உலகின் பொது விதியல்லவா?


## உடன் தேவை

1. பொறிமுறை படவரையுனர்கள் (ஆண்கள்)
2. தட்டெழுத்தாளர்கள் (ஆண்கள்)

பொறிமுறைப் படவரையுனர்களில் அனுபவம் வாய்ந்த படவரையுனருடன், பயிலுனர் படவரையுனரும் தேவை,

சொந்த விபரங்களுடன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்,

விள. இல. 32●
லே/வா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(8040)



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

## Master of Science in Bio Technology

Applications will be entertained by me upto 01st June 1994 from suitable qualified persons who wish to register for the Degree of Master of Science in Bio Technology

"Graduates in chemical, biological, medical, dental, veterinary, agricultural and engineering sciences will be considered. Forward applications with bio data All applicants will be required to sit for a qualifying examination and a viva. Address correspondence to Registrar, University of Jaffna"

REGISTRAR,
*University of Jaffna*
*1994-04-18*

(சி 9208)



## பனை எமது சொத்து

- எமது இயற்கை வளங்களில் ஒன்று பனை
- தமிழீழ வளத்தின் குறியீட்டுச் சின்னம் பனை
- பல்லாயிரம் பேர்களுக்கு தொழில் வழங்குவது பனை
- பலவித பயன்களை வழங்குவது பனை
- மண்ணரிப்பைத் தடுப்பது பனை
- மழை பெய்விப்பது பனை
- நீண்டகாலம் பயனளிக்கும் சீனிமரம் பனை
- அந்நியச் செலாவணி அளிக்கக்கூடியது பனை
- பல வருடங்கள் பயனளிக்கக்கூடியது பனை.

எனவே

பனையைத் தறியாதீர்.
அனுமதியின்றிப் பனை தறித்தால்
தறிக்கப்பட்ட ஒவ்வொரு பனைக்கும்

**1000 ரூபா வீதம்**

அபராதம் விதிக்கப்படும்

அனுமதியின்றிப் பனை தறிப்போர் பற்றிய விபரத்தை அண்மையில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வட்டத் தொடர்பாளர் செயலகத்தில் அல்லது அரசியல்துறை வட்டப் பொறுப்பாளர் செயலகத்தில் அல்லது காவல்துறையினரிடம் தெரியப்படுத்துங்கள்.

பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9001)



யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பதவிகள் வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### 1. கணக்காளர்

*சம்பள இல. 9 (புதிய சம்பளத் திட்டம்) 1105 — 60 x 4 - 75 x 11 - 2170 இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும், மேலும் தகைமைகள், அனுபவங்கள் அடிப்படையில் விசேட படியும் வழங்கப்படும்.*

கல்வித் தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளர் 10-வது சம்பளத் திட்டத்தில் கணக்காளர் - கணக்காய்வாளர் பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத வேலை செய்த அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 11 வது சம்பளத் திட்டத்தில் கணக்காய்வாளர் - கணக்குப் பதிவாளர் - கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ளவர்.

அல்லது

ஆ) ஐக்கிய இராட்சிய கணக்குப் பதிவாளர் கல்வி நிலையத்தின் இறுதிப் பரீட்சையுடன் வர்த்தகம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் கணக்காய்வாளர் / கணக்காளர் / மேற்பார்வையாளர் மட்டப்பகுதியில் வேலைசெய்து நாலு வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ளவர்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த (உயர்தரம்) கணக்கியல் உட்பட 3 பாடங்களுடன் கணக்காளர் / கணக்காய்வாளர் / மேற்பார்வையாளர் மட்டப்பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத வேலை செய்த அனுபவமுள்ளவர்.

### 2. களஞ்சியப் பொறுப்பாளர்

*சம்பள இல: 202 : 11 (புதிய சம்பளத் திட்டம்) 905-40 x 5 50 x 10 - 1605. இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.*

கல்வித் தகைமைகள்

அ) கூட்டுறவு வேலையாள் 12-வது சம்பளத் திட்டத்தில் களஞ்சியப் பொறுப்பாளர் / கொள்வனவு உத்தியோகத்தர் / சில்லறை களஞ்சிய மேற்பார்வையாளர் - சில்லறை களஞ்சிய முகாமையாளர் பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ளவர் அல்லது

13-வது சம்பளத் திட்டத்தில் குறித்த பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவமும்

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலையத்தில் சந்தைப்படுத்தல் - களஞ்சிய முகாமை - விநியோகம் ஆகியவற்றிற்கான பட்டப்படிப்புடன் வர்த்தக தொழில் ஸ்தாபனமொன்றில் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவமும்

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) தராதரப் பத்திரம் - க. பொ. த (உயர்தரம்) மூன்று பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில் வர்த்தக நிறுவனம் ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவமும் உள்ளவர்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 18 - 40 இற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது கூட்டுறவுப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், இவர்கள் தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும். இப்பதவிக்கான விண்ணப்பங்கள்

''தலைவர்''

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்
இல. 111 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
விண்ணப்ப முடிவுத் திகதி: - 30-04-1994,
நண்பகல் 12.00 மணிக்கு முன்பு.

''தலைவர்''

(இ9213)

# மட்டு, அம்பாறை மாவட்டங்களில் பிரகடனப்படுத்தா இராணுவ ஆட்சி

## மட்டு-அம்பாறை அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பிரகடனப் படுத்தப்படாத இராணுவ ஆட்சி நிலவுவதாக மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழன்பன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் தற்போதைய நிலைமை தொடர்பாகப் புலிகளின் குரலுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த இரு மாவட்டங்களிலும் அரச அதிபர், உதவி அரச அதிபர் ஆகியோர் உள்ளபோதும் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் றொகான் குணவர்த்தனாவின் ஆட்சிதான் அங்கு நடக்கிறது.

சமீபத்தில் அரசினால் நடத்தி முடிக்கப்பட்ட உள்ளூராட்சி, பிரதேசசபைகளுக்கான வேட்பாளர்கள் பலாத்காரமாக நிறுத்தப்பட்டனர். ஆனால் விடுதலைப் புலிகள் குறித்த வேட்பாளர்களைப் போட்டியிட அனுமதித்ததாக சிறிலங்காப் படையினர் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு மக்களின் ஆதரவைப்பெற முனைந்தனர். எனக் குறிப்பிட்டார்.

மட்டு அம்பாறை மக்களின் தொழிலான மீன்பிடி மற்றும் விவசாயத் தொழிலிலும் அரசு தடைகளைப்போட்டு வருகிறது. இத்துடன் தொழிலாளரும் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். ஆண்களை இழந்த பெண்களுக்குச் சுயதொழில் பயிற்சியை வழங்க எவரும் முன்வரவில்லை.

முகாம்களில் மக்கள் கால்நடைகள் போல் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இடம் பெயர்ந்தோர் முகாம்களில் சுகாதாரநிலைமைமோசமாக உள்ளது. சில இடங்களில் மக்கள் மீளக்குடியமர விரும்பிய போதிலும் சிறிலங்கா அரசு அக்கறை காட்டுவதில்லை. குறிப்பாக எல்லைக் கிராமங்களில் அவர்களைக் குடியமர்த்த அரசு பின்நிற்கிறது. மாறாக அப்பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதிலேயே அரசு அக்கறை கொண்டுள்ளது என்றார்.

---

பஸ்

வூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்வண்டியைச் சோதனையிட முயன்ற பொலிஸார் ஒருவரையே பஸ் வண்டியில் இருந்த ஒருவர் தாக்கி கொலை செய்துவிட்டு அவரிடமிருந்த ரி-56 ரகதுப்பாக்கியை எடுத்துச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

---

தம்பலகாமம்

வால் இடம் பெயர்ந்தவர்களாவர். இவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளில் அரச அதிகாரிகள் இப்போது ஈடுபட்டுள்ளனர். ஆனால் மக்கள் பாதுகாப்புக் காரணங்களை முன்விட்டு அங்கு குடியமர மறுத்து வருகின்றனர்.

---

உடன்

அனுப்பப்பட்டதாயினும் அவர் நாடு திரும்பாததையடுத்தே மீண்டும் அவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

காமினி திசநாயக்கவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்க டி.பி. விஜேதுங்கா முயன்றுவருவதாகவும் ஆனால் அதனை விரும்பாத கூறே வெளிநாடு சென்று தங்கியிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

---

தன்னியக்க

எம். ஆர். ஹூசெயின் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இந்தப் பயிற்சித் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை அரசின் இந்தப் பணிப்புரைக்கு முன்னதாக 400 முதல் 500 வரையிலான ஊர்காவற் படையினருக்கு ரி-56 துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு காலங்களில் ஊர்காவற் படைப் பிரிவு முகாம்களில் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

---

சுழிபுரம் நோக்கி

சென்றனர். இந்த எறிகணைகள் வயல்வெளிகளிலும், மக்கள் குடியிருப்புகளை அண்மித்த பகுதிகளிலும் வீழ்ந்து பலத்த சத்தத்துடன் வெடித்தன.

(41)

---

# புதிய குடியிருப்புக்கள் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் அமைக்கப்பட்ட புதிய குடியிருப்புத் திட்டம் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது. மகேந்திர வீதியில் உள்ள இக் குடியிருப்பு திட்டத்தை தமிழர்புனர்வாழ்வுக் கழக செயலாளர் க. இளங்கேஸ்வரன் திறந்து வைத்தார்.

முன்னதாக மங்கள விளக்கினை யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி மாலினி ஏற்றிவைத்தார் நல்லூர் வட்டப் பொறுப்பாளர் திரு. வேந்தன் தமிழீழதேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

தீவகம், அச்சுவேலி, பளை பகுதிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்கள் இந்தக் குடியிருப்பில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சம்பிரதாய முறைப்படி திறப்பு கோர்வை வழங்கி குடிமனைகள் திறந்து வைக்கப்பட்டன.

இத்துடன் பாய் படுக்கை விரிப்புகளும் வழங்கப்பட்டன. (தி.மா)

# புளொட் உறுப்பினரால் கடை உரிமையாளர் கடத்தல்

## 1,75,000 ரூபா கொள்ளை

(மன்னார்)

மன்னாரில் மதுபான விற்பனவு நிலையமொன்றின் உரிமையாளரைக் கடத்திச் சென்று அவரிடமிருந்து 175,000 ரூபாவைக் கொள்ளையடித்ததாகச் சொல்லப்படுவதை ஒட்டிப் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள ஆயுதம் தாங்கிய இந்நால்வரும் கோபால்தம்பி, ரஞ்சன், முருகேசபிள்ளை, அந்தோணிப்பிள்ளை என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நால்வரும் மன்னார் நகரிலுள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றுக்குள் புகுந்து அதன் சொந்தக்காரரான திரு. ராமலிங்கம், பாலச்சந்திரன் என்பவரைக் கொலை செய்யப்போவதாக பயமுறுத்தி நிலையத்திலிருந்து மேற்படி பணத்தை கொள்ளையடித்துச் சென்றனர்.

பணத்தைக் கொள்ளையடித்த பின்னர் சந்தேக நபர்கள் நால்வரும் பாலச்சந்திரனை மன்னார் பட்டினத்தில் உள்ளபுளொட் அலுவலகத்திற்குரிய வாகனம் ஒன்றில் கடத்திச் சென்றனர் என்று சொல்லப்படுகிறது.

---

பயிலுநர்

கோட்டப் பணிமனைக்கு தேசிய சேமிப்பு வங்கியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இவ்விபரத்தில் 01.01.94 வரை உள்ள கணக்கு விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சேர்க்கப்பட்டுள்ள பணத்துக்குரிய வட்டிகள் பற்றிய விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இவ் விபரத்தில் பாடசாலையில் கடமையாற்றிய பயிலுநர் ஆசிரியர்களின் இடமாற்றம், இராஜினாமா, பட்டதாரி பயிலுநர்களாக தமது சேவையை தற்போது மேற்கொண்டுள்ள பயிலுநர் ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை தமக்கு தெரிவிக்குமாறு தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் கேட்டுள்ளார்.

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சை

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களை மாகாண பொதுச் சேவைக்கு ஆட்சேர்க்கும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம்-1 இல் 1994 ஏப்பிரல் மாதம் 26, 28, 29, 30 ம் திகதிகளில் காலை 9.00 மணியிலிருந்து நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

வணிகவியல்பட்டதாரிகள் 26 ம் திகதி, பௌதிகவியல் பட்டதாரிகள் 26, 28, 29, 30ம் திகதி, விஞ்ஞானப்பட்டதாரிகள், 29, 30 திகதி நடைபெறும்.

நேர்முகப் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு வருபவர்கள் கீழ் வரும் ஆவணங்களின் மூலப் பிரதியைக் கொண்டு வர வேண்டும் என யாழ்ப்பாணம் வலயம் 1 கல்விப்பணிப்பாளர் கோரியுள்ளார்:-

தேசிய அடையாளஅட்டை, பிறப்புச் சாட்சிப் பத்திரம், கல்விச்சான்றிதழ், தாங்கள் விண்ணப்பித்த பிரிவுக்குள் மூன்று வருடம் வசித்தமையை நிரூபிப்பதற்கான ஆவணம். பிரதேச செயலாளரின் மேலொப்பமிடப்பட்ட கிராமசேவையாளர் சான்றிதழ், அண்மையில் பெறப்பட்ட நற்சாட்சிப் பத்திரம் இரண்டு ஏனைய தகுதிகளை நிரூபிப்பதற்கான ஆவணங்கள். கற்பித்தல் அனுபவங்கள் இருப்பின் அதற்கான ஆவணங்கள்.

# ருவாண்டா படுகொலை ஒருலட்சம் பேர் பலி

ருவாண்டாவில் மனிதப் படுகொலைகள் தொடர்கின்றன. இவ்வாறு கொடூரமான படுகொலைகள் மிக அதிகமாகவே நடைபெறுவதாக செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 6ஆம் திகதிக்குப் பின்னர் ஒருலட்சம் பேராவது கொல்லப்பட்டிருக்கலாம்என அமெரிக்க மனித உரிமைகள் குழு ஒன்று கூறுகிறது.

---

இனப்பிரச்சினை

இனப்பிரச்சினையை அணுகி பிரச்சினையைச் சமாளிக்கலாம் என்ற மாயையை விட்டு உள உறுதியோடு பிரச்சினைக்கு தீர்வு காண அரசு முன்வர வேண்டும். கடந்த தேர்தல்களின் போது இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு காணப்படும் என்று அளித்த வாக்குறுதியை ஐ.தே.கட்சி அரசு காப்பாற்ற வேண்டும். இதிலிருந்து நாம் தவறினால் நாமெதிர்பார்க்கும் முடிவுக்கு மாறாகவே எல்லாம் நடக்கும் என்று இவர்கள் அரசாங்க மேலிடத்திற்கு எடுத்துரைத்திருப்பதாக தெரியவருகின்றது.

தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாமல் மற்றொரு தேர்தலுக்கு முகங்கொடுக்கப் போனால் தமிழ் வாக்காளர்கள் மட்டுமல்ல முஸ்லிம் வாக்காளர்களும் கூட வாக்களித்து என்ன பயன்? வாக்களிக்காமல் விட்டால் என்ன என்ற வேதாந்த மனப்பான்மைக்கு தள்ளப்படுவது தவிர்க்க முடியாத ஒரு நிலைக்கு அவர்களைத் தள்ளிவிடும். கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர்கள் பலரும் இவ்விதமாக சிந்தித்து வாக்களித்திருப்பதை நாம் ஒரு பாடமாக கொள்ள வேண்டும் என்று இவர்கள் எடுத்துரைத்திருப்பதாக தெரியவருகின்றது.

அரசாங்க எம்.பிக்கள் பலரின் இந்த நிலைப்பாட்டை அரசாங்க மேலிடம் இப்பொழுது நன்குணர்ந்துள்ளது என்பதை அரச மேலிடத்தின் சமீபத்திய செயற்பாடுகள் மூலம் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என்று சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஐ.தே.கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்க மேலிடம் இப்பொழுது கொடி காட்டியுள்ளதாக தெரிகின்றது என இவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது யாழ். திருமலை மாவட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 11 ஈரோஸ் எம்பிக்களின் ஆசனங்கள் பாராளுமன்றத்தில் இப்பொழுதும் காலியாகவே இருக்கின்றன.

இந்த காலியிடங்களை அவர்கள் மூலம் பூர்த்தி செய்து பாராளுமன்றத்திற்கு அவர்களை வரவழைத்து இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வைக்காணும் முயற்சியில் ஈடுபட்டால் என்ன என்ற ஒரு யோசனை இப்பொழுது முன்வைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

ஜனநாயகத்தின் மீது தமக்குள்ள பற்றுக்கோட்டை இதன் மூலம் விடுதலைப் புலிகள் வெளிக்காட்ட இது நல்லதொருசந்தர்ப்பம் என்று சொல்லப்படுகின்றது.

இதை பற்றி சம்பந்தப்பட்டோருடன் பேசுவதற்கு என வெளிநாடொன்றில் உள்ள முன்னாள் ஈரோஸ் எம். பிக்களின் இந்த வாரம் கொழும்பு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

---

ஜனாதிபதி

கேள்விக்குரியதாகியுள்ளது. இதில் செல்லச்சாமியின் அமைச்சர் பதவி பறிப்பு என்பது குறித்து என்ன உறுதி மொழி கூறப்பட்டது என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது விட்டாலும் அவரும், அவரது ஆதரவாளரும் இ.தொ.காவில் இருந்து வெளியேற்றப்படுவதற்கு ஐ.தே.கபச்சைக்கொடி காட்டியுள்ளது என்பதில் சந்தேகம் எதுவும் இருக்கத் தேவையில்லை. இதன் ஒரு அம்சமாகவே இ.தொ.கா.பொதுச் சபை ஹட்டனில் கூடியபோது அமைச்சர் செல்லச்சாமிக்கும், எட்டு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் எதிராக மேற்கொண்ட தீர்மானத்தை அமுலாக்க நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு நீக்கப்பட்டதைக் கொள்ள முடியும்.

இதன்பின்பே அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை சந்தித்ததும், தழுவிக் கொண்டதும், முத்தமிட்டதெல்லாம். ஆனால், இச் சந்திப்பில் அமைச்சர் தொண்டமான் தனது பேரனை மட்டும் அழைத்துச் சென்றது என்பது இ.தொ.காவின் அடுத்த வாரிசு என்பதை நிலை நிறுத்தும் நடவடிக்கையே ஆகும். இது செல்லச்சாமியை அவர் வெற்றி கொண்டதற்கான அடையாளம் என்றே கூறலாம்.

இந்த வகையில் அமைச்சர் தொண்டமான் ஒரு ஐ.தே. கவுடன் கொண்ட ஊடலின் பின் ஏற்பட்ட கூடுதல் மூலம் தனது குறிக்கோளை நிலை நிறுத்திக் கொண்டுள்ளார் என்றே கூற முடியும் அதாவது இ.தொ.காவிற்குள் தனது பிடியை இறுக்கிக் கொண்டதோடு தனது தலைமைத்துவத்தையும் பாதுகாத்துள்ளார் ஐ.தே.கவும் தேர்தல் வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படத் தொடங்கி இருப்பதால் தொண்டமானின் உறவின் மூலம் கணிசமான பலன் அடையக் கூடும்.

ஆனால், இதில் காட்டிக் கொடுக்க முற்பட்டு தற்பொழுது தோல்வி அடைந்துள்ள அமைச்சர் செல்லச்சாமியினதும் ஏனைய எட்டுப்பேரினதும் அரசியல் எதிர்காலமே கேள்விக்குரியதாகும் இது நீண்ட காலமாக தொண்டமானின் கீழ் இருந்த போதும் அவரைப்பற்றி விளங்கிக் கொள்ளாமையில் விளைந்த விபரீதம் என்றே கொள்ளமுடியும்

இதே சமயம், மாற்று அரசியலமைப்போ மலையக மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டக் கூடிய தலைமையோ ஒன்று மலையக மக்களுக்கு கிடைக்கப்பெறாதவரை அமைச்சர் தொண்டமான் ஊடலின்போது இலட்சக் கணக்கான தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதும் அமைச்சரின் தேன் நிலவின் போது மலையக மக்கள் பிரார்த்தனை செய்வதும் தவிர்க்கமுடியாத ஒன்றாகவே எதிர்காலத்திலும் இருக்கும்.

# புலிகள் மீதான தடையை நீடிக்க மாநில அரசு ஆதாரம் தரவேண்டும்

## இந்திய உள்துறை அமைச்சர் சவான் கூறுகிறார்

(டில்லி)

தமிழக அரசு அளிக்கும் ஆதாரங்களை நடுவண் மன்றம் பரிசீலனை செய்தபின்பே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது குறித்து முடிவு எடுக்க இயலும் என இந்திய உள்துறை அமைச்சர் சவான் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதற்கு தேவையான புதிய ஆதாரங்களை தமிழ்நாடு அரசு அளித்தால் அது குறித்து மத்திய அரசு பரிசீலிக்கும் எனவும் அவர் கூறினார்.

நேற்று மாநிலங்கள் அவையில் கேள்வி நேரம் முடிந்ததும் அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினை ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ்நாடு அரசின் மீது மத்திய அரசுக்கு எந்த விரோதமும் இல்லை. ஆனால் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது குறித்து முரண்பாடு எவ்வாறு ஏற்பட்டது என்று தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதில் மாநிலத்திலுள்ள பொறுப்பான தலைவர்கள் கூட முரணான தகவல்களை வெளியிடுவதை தம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை என சவான் மேலும் கூறினார்.

# தன்னியக்க ஆயுதப் பயிற்சி ஊர்காவற்படைக்கு இல்லை

## பாதுகாப்பு சீர்குலையுமென அச்சம்

(கொழும்பு)

ஊர்காவற் படைப் பிரிவுக்கு தன்னியக்க ஆயுதப் பயிற்சி வழங்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இதற்கான பணிப்புரையை அரசு வழங்கியுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்தப் பயிற்சித் திட்டம் கைவிடப்பட்டதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன மாத்தளை மாநகர சபை உறுப்பினர்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதப்படையினருக்கு புதிய முறை யுத்தப்பயிற்சி

## - பாராளுமன்றத்தில் ரணில்

(கொழும்பு)

சிறிலங்கா ஆயுதப்படையினர் பலருக்கு புதிய முறை யுத்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பிரதம மந்திரி திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பது தொடர்பான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசும் போதே பிரதம மந்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும் போது மேற்படி புதிய முறையிலான யுத்தப் பயிற்சி வழங்குவதற்காக சிறிலங்கா ஆயுதப் படையினரில் இருந்து தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவித்தார்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.04.22 - வெள்ளி இரவு

8.01 ற்கு - மண்தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி " மண் "

8.10 ற்கு - காங்கேசன் துறை சபயர்வியூ கொட்டல் தாக்குதல் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி, "பரிமாணத்தின் ஆரம்பம்"

8.30 ற்கு - செய்திகள்

8.40 ற்கு - அரசியல் அரங்கம் 'மேற்குலகம் தோற்றுவிக்கும் மனித நோய்கள்'

8.50 ற்கு - வாத்திய கானங்கள்.

1994.04.23 - சனி காலை

7.02 ற்கு - மாவீரர் வணக்கம்

7.15 ற்கு - நீங்கள் கேட்டவை

7.30 ற்கு - செய்திகள்

7.35 ற்கு - பத்திரிகைச் செய்திகள்.

7.40 ற்கு - நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி.

தேர்தலில் மற்றும் நாட்டின் பிரச்சினைகள் குறித்து உங்கள் நடவடிக்கை என்ன? என கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறந்த பொருளாதார கொள்கையில் தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்களின் நண்பர்கள் உறவினர்களே நன்மையடைகின்றனர் இவ் வாறற்ற நிலை உருவாக வேண்டும் என்றார்.

சிறிலங்கா வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை மிகவும் அதிகரித்துச் செல்கிறதே? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? என கேள்வி யெழுப்பப்பட்டபோது.

இவ்வாறு துண்டு விழும் தொகை அதிகரித்துச் செல்வதற்கு துஷ்பிரயோகமும், வீண்விரயமுமே காரணம் என தெரிவித்த சிறிமாவோ பண்டாரநாயக்கா, இதனைத் தாம் முழுமையாகக் கட்டுப்படுத்தப் போவதாகவும் தற்போது காணப்படும் 87 அமைச்சர்களை 20 ஆக குறைத்து விடப்போவதாகவும் தெரிவித்தார்.

இதனைவிட மேலும் பல திட்டங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அதனைத் தான் தொடர்ந்து அமுல் படுத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

இந் நிலையில் தேர்தல் முடிவுகள் தமக்கு சாதகமாக அமையும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.


யாழ் ஸ்ரீதர் திரையில்

SYLVESTER STALLONE நடித்த

RAMBO

தினசரி மாலை 4.00, 6.00

சனி, ஞாயிறு காலை 10.30, மாலை 4.00, 6.00 மணி

பெப்ரவரி 94 ஒளிவீச்சு

சனி, ஞாயிறு பி. பகல் 2.30 மணிக்கு காண்பிக்கப்படும்

(இ-9223)



நாளை (23-04-94) சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில்

நினைவில் நிலைத்து நிற்கும் இனிக்கும் நிகழ்வு

செந்தமிழ் பாட்டு II

விடியலைத்தேடும் பறவைகள்

ஒலிப்பதிவு நாடா

இசையமைப்பாளர்:

யாழோசை கண்ணனின்

இசை நெறியில் நடைபெறும் மாபெரும்

★ இன்னிசை நிகழ்வு ★

இசைத் துறையில் பயிற்சிபெற்று பட்டம்பெற்ற பல பாடகர்கள், பாடகிகள் இணைந்து பல்சுவைப் பாடல்களை வழங்குவுள்ளனர்

பிரபல இசையமைப்பாளர்கள்

இளையராஜா, தேவா, மரகதமணி ஆகியோரின் தேர்ந்த இசை வண்ணங்களும்

கிற்றார், புல்லாங்குழல், ஒகன் இசையும் நடைபெறவுள்ளன.

ஏப்பிரல் 23, 24

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி


யாழ். கைலாசபதி கலையரங்கம்

மாலை 3-00

(இ-9230)


# நினைவு அஞ்சலி

2-ம் ஆண்டு 1-ம் ஆண்டு



நடராசா இளையபிள்ளை

(புங்குடுதீவு 10-ம் வட்டாரம்)

| | | |
|---|---|---|
| 12- 7- 1910 | <தோற்றம்> | 2- 9- 1914 |
| 24- 2- 1992 | <மறைவு> | 19- 5- 1993 |

"வையகத்து வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்பவன் வானுலகத்தில் உள்ள தெய்வ நெறியில் வைத்து மதிக்கப்படுவான்.

இன்று நடைபெறும் ஆண்டு திவச வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பாலன் குடும்பத்தினர்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(இ-9231)

# மரண அறிவித்தல்



## திருமதி முருகேசு இராசம்மா

திருமதி முருகேசு இராசம்மா 17-4-94ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், தேவராசா, நவரெத்தினம்(கனடா), இன்னராசா (பிரான்ஸ்), தங்கராசா, தருமராஜா (கனடா), புஸ்பவதி, லலிதா (கொலன்டி), பத்மினி (ஜேர்மன்), ருக்குமணிதேவி (இந்தியா), வர்ணராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகம்மா, ருக்குமணி, ஞானகுமாரி, ஜெயமதி, றஜனி, பத்மநாதன், நாகராசா, ராஜகோபால், செல்வராஜா, சந்திரவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், அழகம்மா முத்துச்சாமியின் மைத்துனியும், பவளம், துரைமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபாஷினி, சுபாஸ்கரன், சுதர்ஷினி, ஜெயா, ரஜிதா, ஜனார்த்தனன், துஷிதா, திருமாறன், வாகீசன், மயூரன், சரஞ்யா, கோஷனா, நர்மிதா, ராதா, ரகுவன், திவ்யா, சுதர்சன், மாலதி, திவாகரன், சதீஷ்கரன், பத்மரன், மஞ்சுளா, தேவிகா, மாலா, மாதவன், சிவாஷினி, கேசவன், சிவி, அபிராமி, அபிராஜ், புருஷோத்தமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-4-94 நாளை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

காளிகோவிலடி,
கோப்பாய்.

மு. தங்கராசா
(மகன்)

(8114)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 81-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.